விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: இருபத்தினான்கு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 01 புதன்கிழமை (14.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 116

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## அடுத்த வரவு-செலவுத் திட்டம் ஜனாதிபதி மகிந்தவுக்கு சுனாமி

### ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் ரணில் விக்கிரமசிங்க தாக்கல் செய்த வரவு-செலவுத் திட்டம் அவருக்கு சுனாமியாக மாறியதுபோல், அடுத்த வரவு-செலவுத் திட்டம் மகிந்த ராஜபக்ஷவுக்குச் சுனாமியாக மாறும் என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

பத்திரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் ஆறு வருடங்களுக்குப் பொதுத் தேர்தல் நடத்தப்பட மாட்டாது. அதேபோல் ஆறு வருடங்களுக்கு ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்பட மாட்டாது.

இந்தக் காலப் (24 ஆம் பக்கம் பார்க்க)

## பத்மநாதனை விசாரணை செய்ய இந்தியா மீண்டும் கோரிக்கை

### பிரபாவின் இறப்புச் சான்றிதழைப் பெறவும் முயற்சி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தரான கே.பி. என்ற குமரன் பத்மநாதனை விசாரணை செய்யவும் அவ்ரது வங்கிக் கணக்குகளைப் பரிசீலிக்கவும் உரிய ஏற்பாட்டினைச் செய்து தருமாறு இந்திய அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வருடம் பத்மநாதன் கைது செய்யப்பட்டவுடன் இந்திய அதிகாரிகள் இவ்வாறு கோரிக்கை ஒன்றினை விடுத்திருந்தனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய சாட்சியாகப் பத்மநாதன் இருப்பதால் அவரை விசாரிப்பதற்கு இந்தியா அனுமதி கோரியிருந்தது.

ஆனால் இலங்கை, இந்திய அதிகாரிகளின் கோரிக்கை சாதகமாகப் பதில் அளிக்கவில்லை என (24 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இராணுவத் தளபதியிடம் அமெரிக்கா விசாரணை நடத்தும்!

### ராஜதந்திர தரப்புகள் தகவல்

(கொழும்பு)

அமெரிக்காவுக்குத் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுத்த வாரம் அமெரிக்கா செல்லும் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவிடம் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் மற்றும் அமெரிக்க உள்துறைத் திணைக்களம் என்பன விசாரணை நடத்தத் தயாராகி வருவதாக ராஜதந்திரத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (24 ஆம் பக்கம் பார்க்க)

### புதுவருட நல் வாழ்த்துக்கள்

பிறந்துள்ள விகிர்தி புதுவருடம் அனைவருக்கும் சாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த இறைவனை வேண்டுவதுடன், வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- வலம்புரிக் குடும்பம்

## தமிழ், சிங்கள மக்களுக்கு கிலாரி புதுவருட வாழ்த்து

(வாஷிங்டன்)

இலங்கையில் யுத்தம் முடிபடைந்த பின் கொண்டாடப்படும் முதலாவது தமிழ், சிங்களப் புதுவருடத்தை முன்னிட்டு உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழ், சிங்கள மக்களுக்கு அமெரிக்க வெளியுறவுச் செயலர் கிலாரி கிளின்டன் புதுவருட வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

தொடங்கும் இப் புதுவருடம்முதல் தசாப்தத்தில் இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் ஒற்றுமையாக, சமாதானமாக கொண்டாடப்படவுள்ளது.

இந்த சந்தர்ப்பம் அனைத்துத் தரப்பினரையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்வோரையும் இணைத்து நம்பிக்கைகளுடனும் புத்துணர் (24 ஆம் பக்கம் பார்க்க)

## கடும்போக்குத் தேசியவாதக் கட்சிகள் தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளன

### அமெரிக்கா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் கடும் போக்குடைய தேசியவாதக் கட்சிகள் படுதோல்வியடைந்துள்ளதாக அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகாரப் பகிர்வினை நிராகரித்த கட்சிகள் இந்தத் தேர்தலில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. நீண்ட கால யுத்தத்திற்குப் பின்னர் நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளதாக அமெரிக்கப் பிரதி ராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணையைப் பயன்படுத்தி நாட்டை ஐக்கியப்படுத்த ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றி மற்றும் பொருளாதாரக் கொள்கைகளுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்சியை இந்தத் தேர்தலில் மக்கள் ஆதரித்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொள்ளக் (24 ஆம் பக்கம் பார்க்க)

நிலையான சமாதானம் மலர்ந்து அனைத்து மக்களும் இன்பமுடன் வாழ புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய நற்செய்தி!

ASP ENTERPRISES

முதன் முறையாக அறிமுகப்படுத்தும்

INDUCTION COOKER

# குறைந்த நேரம் # சிக்கன மின்சாரம்
# அடுப்பிலேயே மின்சார அலகுகளை அறிந்துகொள்ளலாம்
# தீ, மின் அபாயமில்லை
# ஒரு வருட உத்தரவாதம்
# இலகுவாகக் கையாளலாம்
# இதற்குரிய சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்
# சர்வதேச தரச்சான்றிதழ் பெற்றது (ISO 9001 : 2000) # பக்க விளைவுகளற்றது
# புகை, வெப்பம் இல்லை # பாத்திரங்கள் கரிப்பிடிக்காது

அனுகூலங்கள்





யாழ் மண்ணில் புதியதோர் உதயம்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352

(C-052)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சென்னை சென்ற சிவாஜிலிங்கம் திருப்பி அனுப்பப்பட்டார்



(கொழும்பு)

தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று சென்னை விமான நிலைய அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

சிவாஜிலிங்கம் தனிப்பட்ட விஜயத்தினை மேற்கொண்டே சென்னை சென்றதாகவும் அவர் சென்னை விமான நிலையத்தில் இறங்கியபோது எதுவித காரணமும் இன்றி அவரை விமான நிலைய அதிகாரிகள் திருப்பி அனுப்பியதாகவும் தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

இவர் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் லண்டனிலிருந்து சென்னை சென்றபோது சென்னை விமான நிலையத்தில் வைத்து கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-14)

# பேசும் படம்



யாழ். நூலகத்தின் சுத்தம்...


யாழ் நகரில்

British College of Higher Studies ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளுக்கு 100% வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும்/உறுதிப்படுத்தும் முகமாக அவர்களின் ஆளுமையை விருத்திசெய்யும் (Personality Development) பயிற்சிப் பட்டறைகள் (Work shops)

இப் பயிற்சி நெறியில் உள்ளடங்குபவை

- நேர்முகத்தேர்வினை எவ்வாறு எதிர் கொள்வது?
- அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?
- எப்படியான ஆயத்தங்களிற்கமைய உங்களைத் தயார்படுத்துவது?
- உங்களிடம் உள்ள ஆவணங்களை எவ்வாறு முறைமைப்படுத்துவது?
- அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலமும், அதற்கான உரையாடற் பயிற்சிகளும்
- முகாமைத்துவம் (Management)
- மனிதவளப் பயன்பாடுகள் ( Human Resource Management)
- அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள் (Ms.Windows, Ms Word, Excel, Power Point, Accounting)

பயிற்சியின் முடிவில் தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்

சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்களின் பதிவுகளை தாமதமின்றி முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் நேரஅட்டவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவருக்கும் எமது நிறுவனத்தினால் சுயவிபரக்கோவை (Bio-Data) தயாரிக்கப்பட்டுத் தொழில் வங்கியிலும் (Jop Bank) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

British College of Higher Studies

No. 15, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna.

web: www.bchs.lk Email:info@bchs.lk Tel: 021-2224550, Mobile:0777222422, 0714299935, 0773501499

(C-434)


# குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

தீப்பிடித்து எரிந்த நிலையில் படுகாயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று நண்பகல் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பிரபாகரன் பிறேமஜோஜினி (வயது 28) என்ற குடும்ப பெண்ணே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 5ஆம் திகதி தீக்காயங்களுடன் யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். (ச-9)

# ஓடுபிரித்து இறங்கி தங்கச் சங்கிலி திருட்டு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை ஆசியடி விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள வீடொன்றினுள் புகுந்த திருடன் அங்கிருந்து நான்கு பவுண் பெறுமதியான சங்கிலியைத் திருடிச்சென்றுள்ளான்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டிலுள்ள குடும்பஸ்தர் வீட்டிலிருந்து வெளியே சென்ற சமயம் வீட்டின் ஓட்டினைப்பிரித்து உள்நுழைந்த திருடன் அங்கு பதுங்கியிருந்துள்ளான்.

பின்னர் வீட்டு உரிமையாளர் அங்கு வந்துதான் அணிந்திருந்த நான்கு பவுண் பெறுமதியான சங்கிலியை கழற்றி வைத்து விட்டு உறங்கச் சென்றபோது அவர் கழற்றி வைத்த சங்கிலியை எடுத்த திருடன் அவர் படுத்திருந்த அறைக்குச் சென்று அணிந்திருந்து கைச்சங்கிலியை திருட முற்பட்ட போது அவர் சுதாகரித்து எழ திருடன் தப்பிச் சென்றுள்ளான். (ச-14,27)

# சிவபூமி முதியோர் இல்ல 3ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சிவபூமி முதியோர் இல்ல மூன்றாவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாலச்சந்திரன் அரங்கில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சர்வதேச அபிவிருத்திக்கும் புனர்நிர்மானத்துக்குமான நிறுவன சுகாதார இணைப்பாளர் மூதறிஞர் வைத்திய கலாநிதி நச்சினாக்கினியன் தம்பதிகளும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் சி.குமாரவடிவேலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வுகளாக மாணவர்களின் கலை நிகழ்வுகள், கவியரங்கம், பட்டிமன்றம், நாட்டிய அஞ்சலி, நாடகம் என்பவையும் இடம்பெறும். (ச-14)

# க.பொ.த சாதாரண தர முன்னணிப் பெறுபேறு

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

எஸ்.திலீப் 5ஏ, பி, 2சி, எஸ்., எஸ்.கஸ்தூரன் 4ஏ, 2பி, 2சி, எஸ், ரி.கம்சத்வனி 4ஏ, பி, 2சி, 2எஸ், ஜெ.மதிவதனி 3ஏ, 3பி, 3சி, கே.கிருஸ்ணமேனன் 3ஏ, பி, 4சி, எஸ், பி.கவிதா 2ஏ, பி, 4சி, 2எஸ், ரி.கோடீஸ்வரன் 2ஏ, பி, 4சி, ரி.தர்சிகன் 2ஏ, பி, 2சி, 4எஸ், கே.சங்கீர்த்தனன் 2ஏ, சி, 3எஸ்., எஸ்.கஜீபன் ஏ, 3பி, 4சி, எஸ்.பவிதா ஏ, 3பி, 2சி, 2எஸ், பி.பிரதீபன் ஏ, 2பி, 5சி, எஸ், பி.ஜிந்துஜா ஏ, 2பி, 3சி, 2எஸ், ஆர்.பிரசாந்தி ஏ, 2பி, சி, 2எஸ், எஸ்.நிலானி ஏ, பி, 2சி, 3 எஸ். (ச)

# இரத்ததான நிகழ்வு

(கொக்குவில்)

புதுவருடத் தினத்தை முன்னிட்டு கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தினால் 6ஆவது ஆண்டாக தொடர்ந்து நடத்தும் இரத்ததான நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சரஸ்வதி முன்பள்ளியில் இடம் பெறுவதுடன் முன்பள்ளிக்கான அலுமாரி வழங்கும் நிகழ்வு காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ச-3)


காணி விற்பனைக்கு

வேம்படி வீதியும் 1ஆம் குறுக்கு வீதியும் இருவழி பாதையில் அமைந்துள்ள 2 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0726514451 021 222 2284

(1187)

விரைவில் தோற்றம் பெறவுள்ளது அன்பு உலகம்

(1186)

தேவை

நல்லூரிற்கு அருகாமையில் இயங்கும் பாமஸிக்கு, பான்ஸி, மருந்து விற்பனையில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு: 077 3689179

(1178)

Institute of computer Studies

யாழ். மண்ணில் புத்தூரில் புதிய உதயம்... I.C.S

கணனியியல் கல்வி நிறுவனம்

தரம் 01- A/Lவரை மற்றும் ஏனைய மாணவர்களுக்கான கணனியியல் கற்கை நெறி மிக நவீன முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாட விதானம்: ♦ Computerized English Courses ♦ D.T.P ♦ Computing hardware ♦ I.T

அனைத்து விதமான Diploma கணனியியல் கற்கை நெறிகளும் ஆரம்பமாகியுள்ளதால் உங்கள் பதிவுகளையும் மேற்கொள்ளவும்.

பதிவுக் கட்டணம் இலவசம் மாதக் கட்டணம் 400/- மட்டும்

சர்வதேச சான்றிதழ்களும் வழங்கப்படும்.

முழு நேர அல்லது பகுதி நேர கணனி பெண் ஆசிரியர் தேவை

M.S.office, D.T.P, I.T தெரிந்த ஆசிரியர்கள் தேவை, சுயவிபர கோவையுடன் நேரில் வரவும்.

Puttur West,
Chunnagam Road, Puttur.
T.P.: 021 3211982
E-mail: icsjaffna@gmail.com

கண்ணீர் அஞ்சலி

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மகாசபைத் தலைவருமான கௌரவ எம்.சி.சுப்பிரமணியம் அவர்களின் பாரியார் திருமதி இலட்சுமி சுப்பிரமணியம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் துயர் கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அ.இ.சிறுபான்மைத் தமிழர் மகாசபை
யாழ்ப்பாணம்.

(1187)

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010



## கைவிசேட பாரம்பரியம்

**தமிழர் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் "கைவிசேட கொடுக்கல் வாங்கல்" முக்கியமான விடயமாகும்.**

முன்னைய காலத்திலே, புத்தாண்டு பிறந்ததும்
கைவிசேடத்துக்கான சுப நேரம் வந்ததும்
வீட்டின் குடும்பத் தலைவன், தமிழ் மரபின்படி,
வெற்றிலையில் நாணயத்தை வைத்து
மனைவிக்கு கைவிசேடம் கொடுக்க,
மனைவி கணவனின் காலடியில் பணிந்து
வணங்கி கைவிசேடம் பெறுவார்.

இல்லத்தை வளமாக்கி, பிள்ளைகளை
வளர்த்தெடுக்கும் மனைவி
மேலும் வாழ்க்கையில் மேன்மைகள் பெற
கைவிசேடம் கொடுக்கிறார், தமிழ் மரபின்படி,
மனைவியும் கணவனின் மேன்மைக்காக
கணவனை வாழ்த்தி கைவிசேடம் கொடுப்பார்.

தந்தையும் தாயும் சேர்ந்து நிற்க,
இல்லத்தின் அனைவரும் ஒவ்வொருவராக
வணங்கிக் கைவிசேடம் பெறுவார்கள்.
புதுவருடமன்று குலதெய்வ வழிபாடு செய்து,
பெரியோர்களிடம் ஆசி பெறுவது
நன்மைதரும் என்பது ஐதீகம்.

இவை போன்ற புத்தாண்டுப்
பழக்கவழக்கங்களை சுப நேரத்தில்,
உரிய முறையில், தமிழர்கள் பின்பற்றிப்
பேணிப் பாதுகாத்து வருகிறார்கள்.

உதயமாகும் இப்புதுவருடம் சகல மக்களுக்கும்
சுபீட்சத்தையும், சகல நலன்களையும் நல்க
வேண்டுமென வாழ்த்துகிறோம்.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

# புத்தாண்டையொட்டி கொழும்பில் இருந்து பிரமாவட்டங்களுக்கு விசேட ரயில் சேவை

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொழும்பில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு விடுமுறையில் செல்கின்றவர்களின் வசதி கருதி விசேட ரயில் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ரயில்வே திணைக்களம் தெரிவிக்கிறது.

தற்போது இடம்பெற்று வரும் ரயில் சேவைகளுக்கு மேலதிகமாக 26 ரயில் சேவைகள் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு கோட்டையில் இருந்து நானு ஓயா, பண்டாரவளை, ரம்புக்கனை, மாஹோ மற்றும் காலி ஆகிய பகுதிகளுக்கு இந்த விசேட ரயில் சேவைகள் இடம்பெறுகின்றன.

ரயில் சேவையுடன் இணைந்து விசேட பஸ் சேவைகளை நடத்தவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு போக்குவரத்து அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது. (2-4)

## தேசிய கல்வியியற்கல்லூரிகளின் இறுதிப்பரீட்சை

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2009ஆம் ஆண்டுக்குரிய மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி முதல் 9 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன.

இதன்படி எழுத்துப்பரீட்சைகள் மே மாதம் 3ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையும் செயல் முறைப்பரீட்சைகள் மே மாதம் 8,9ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (2-4)

## ஸ்பெயினில் நில நடுக்கம்

(மாட்ரிட்)

ஸ்பெயினின் தெற்குப் பகுதியிலுள்ள கிரெனடா நகருக்கு அருகே திங்கட்கிழமை நில நடுக்கம் ஏற்பட்டது.

நில நடுக்கத்தின் அதிர்வுகள் ரிக்டர் அளவு கோலில் 6.2 அலகாகப் பதிவானது. கிரெனடா நகரிலிருந்து 24 கி.மீ. தொலைவிலுள்ள சியாரா நெவடா மலைப்பகுதியை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. என அமெரிக்க நில நடுக்கவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நில நடுக்கம் காரணமாக உயிரிழப்போ, பொருள்சேதமோ ஏற்பட்டதாக உடனடி தகவல் ஏதும் இல்லை. (2-4)

# பிதிர்க்கடன்களை நிறைவு செய்யும் பொருட்டு கீரிமலைக்கேணி வசதியாக அமைக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்குள்ள புனித கேணியையும் அதன் சுற்றுப்புறச் சூழலையும் பார்வையிட்டார்.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கான பயணத்தை மேற்கொண்ட அவர் சிறப்பு பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

அத்துடன் அங்குள்ள புனித கேணியினதும் சுற்றுப் புறச் சூழலினதும் சுகாதார நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் கோயில் நிர்வாகத்தினருடனும் உரிய தரப்பினருடனும் கலந்துரையாடினார்.

இதில் முக்கிய அம்சமாக கோயிலுக்கு வரும் பக்தர்கள் பிதிர்க் கடமைகளை நிறைவு செய்யும் பொருட்டு கடலில் இறங்குவதற்கு ஏதுவாக கரையின் ஒரு பகுதியிலுள்ள கற்களை அப்புறப்படுத்தி தருமாறு கோயில் நிர்வாகத்தினர் அமைச்சரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்தனர்.

இதற்கமைவாக அதற்கான செலவுத் திட்டம் அடங்கிய அறிக்கையினை தமக்கு அனுப்பி வைக்குமாறும் அத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு தான் கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (2-4)

# பிரதமராக யாரை நியமிப்பது என்று ஜனாதிபதி முடிவு செய்வார்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமராக யாரை நியமிப்பது என்பது குறித்து ஜனாதிபதி முடிவு செய்வார் என்றும் கட்சியில் இதற்குத் தகுதியானவர்கள் பலர் உள்ளனர் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐ.ம.சு.முன்னணியின் ஏற்பாட்டில் மகாவலி நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார் அவர் தொடர்ந்து கூறுகையில்,

கட்சியில் உள்ளவர்களில் மிகவும் தகுதியானவரை பிரதமராக ஜனாதிபதி நியமிப்பார். அமைச்சரவையை 35 ஆக மட்டுப்படுத்தவே திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டுக்கு சுமையற்றவாறு அமைச்சர் தொகை முடிவு செய்யப்படும் இம்முறை அமைச்சரவையில் புது முகங்களுக்கும் இடமளிக்கப்படும் என்றார். (2-4)


புதிய மெருகுடன் இசைக்கொலுவேறிட..

புகழ்பெற்ற கலைஞர்களின் கைவண்ணத்தில்

யாழ் சப்தஸ்வரா இசைக்குழு

SAPTHASWERA MUSIC GROUP

உங்கள் விழாக்களை மெருகேற்ற அழைத்து மகிழுங்கள்..

தொடர்புகளுக்கு:-

நீர்வேலி, விநாயகர் வீதி, நல்லூர் படைக்க, கல்வியங்காடு. 0776990573 / 0213216621

ஸ்கைவே எலக்ரோனிக்ஸ், கல்வியங்காடு நியூ மாக்கெற். 0774108051

இரா.சிவராசன், காஞ்சன சேவை வீதி, முத்திரை சந்தி, நல்லூர். 077 4707839/077 8808739


# தேர்தல் தொடர்பான சட்ட ஒழுங்குகள் சரியான முறையில் பின்பற்றப்படவில்லை

## கபே சுட்டிக்காட்டியுள்ளது

(கொழும்பு)

நடைபெற்ற பொதுத் தேர்தல் நியாயமான முறையில் நடைபெற்றதாகக் கருதப்பட முடியாது என கபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் தொடர்பான சட்ட ஒழுங்குகள் சரியான முறையில் பின்பற்றப்படவில்லை என கபே தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களை மிக மோசமான முறையில் மீறியதாகவும் உதாரணமாக நாவலப்பிட்டியில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சு மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் ஆளும் கட்சி வேட்பாளர்களது பிரசார சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாகவும் இலங்கை தேர்தல் வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சில அரசாங்க அமைச்சர்கள் பல்வேறு வழிகளில் தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்துள்ளார். (2-4)


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

அழகிய தங்க நகைகளை 22 கரட்டில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடனும் நவீன வடிவமைப்புகளிலும் செய்து பெற்று நாடவேண்டிய ஸ்தாபனம்

பிரம்யா நகை மாடம்

யாழ் வீதி,

ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

(சி/049)



மணிவிழா

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு.வி.மாணிக்கம் அவர்களின் மணிவிழா நிகழ்வு 2010.04.22 அன்று நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மணிவிழா மலர் வெளியீடும் பணிநயப்பு நிகழ்வும் இடம் பெற இருப்பதனால் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், பாடசாலை சமூகத்தவர்கள் அனைவரும் மணிவிழா குழுத்தலைவர் திரு.செ.உதயகுமார் (பிரதிஅதிபர்) அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு :0776696944, 021 222 3456

Email:Jcmmvnavothaya@gmail.com

(சி/050)





அருள்தரும் அன்னை ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் தாவடி-கொக்குவில்

வருடாந்த பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்-2010

நிகழும் மங்கலம் மிகு விகிர்தி வருஷம் சித்திரைத்திங்கள் 1 ஆம் நாள் (14.04.2010) புதன்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் பெருவிழா நடைபெறும். அடியார்கள் இப்புனித நாட்களில் விரதம் பூண்டு பக்தி மனம் பரவ பதி தன்னை நாடி பரம்பொருளைப் பாடிப் பரவி பணிசெய்து விழாப் பொலிவு தரிசனம் பெற்று பக்தி ஆனந்த பெருவாழ்வு வாழ்வீர்களாக!

திருவிழா விபரம்

13.04.2010 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி சாந்திக்கிரியைகள்
14.04.2010 புதன்கிழமை பகல் 12 மணி கொடியேற்றம்
22.04.2010 வியாழக்கிழமை மாலை 6.30 மணி கைலாச வாகனம்
23.04.2010 வெள்ளிக்கிழமை காலை 8 மணி 1008 சங்காபிஷேகம்
24.04.2010 சனிக்கிழமை காலை 8 மணி 1008 சங்காபிஷேகம்
25.04.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி 1008 சங்காபிஷேகம்
26.04.2010 திங்கட்கிழமை மாலை 6.30 மணி சப்பரத் திருவிழா
27.04.2010 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தேர்த் திருவிழா
28.04.2010 புதன்கிழமை அதிகாலை 5.30 மணி 1008 சங்காபிஷேகம்
பகல் 11 மணி தீர்த்தத் திருவிழா
மாலை 6 மணி கொடியிறக்கம்
29.04.2010 வியாழக்கிழமை மாலை 6 மணி பூங்காவனம்
30.04.2010 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி வைரவர் பொங்கல்

குறிப்பு:- தினமும் காலை 8.30 மணிக்கும், மாலை 5.00மணிக்கும் திருவிழாப் பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ச்சியாக அனைத்து பூஜைகளும் நடைபெறும்

தொ.பே.021 2225135

பிரம்மஸ்ரீ நா. சசிதரசர்மா (ரவி ஐயா)
ஆதீனகர்த்தா

# இன்று ஒரு தகவல்

## ஒப்பனை முகங்கள்

காலை நேரம். தொலைபேசி மணி அடிக்குது. அதைப் போய் எடுக்கிறார் ஒருத்தர். அடுத்த முனையில் இருக்கிறவர்,

"வணக்கம்; புத்தாண்டு வாழ்த்துக்கள்!"

"ரொம்ப மகிழ்ச்சி... நன்றி... உங்களுக்கும் எனது வாழ்த்துக்கள்... எப்படி இருக்கிறீர்கள்?"

"நான் நல்லா இருக்கிறேன். நீங்க எப்படி இருக்கிறீங்க?"

"ரொம்ப நல்லா இருக்கிறேன்" என்று சொல்லி போனை வைத்து விட்டு, 'லொக்கு...லொக்கு' என்று இருமிக் கொண்டே வந்து நாற்காலியில் உட்காருகிறார் இவர். என்ன அர்த்தம்? இந்தப் புத்தாண்டில் இவர் சொன்ன முதல் பொய் இது.

நாலு நாளா இருமிக் கொண்டிருக்கிறார்.

நான் நல்லா இருக்கிறேன் என்று பொய் சொல்கிறார்.

ஒருமனிதன் சராசரியாக ஒரு நாளைக்கு 200 தடவை பொய் சொல்கிறானாம். இது ஒரு புள்ளிவிபரம். அந்த இருநூறு பொய்யில் இப்ப சொன்னதும் ஒன்று.

"நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய்" என்று சொல்வது.

"சாப்பாடு பிரமாதம்! என்று சொல்வது.

"உங்களுடைய கவிதையைப் படித்தேன்–கலக்கிட்டீங்க" என்பது, மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய தலைவர் அவர்களே"– "உனக்காக உயிரையே கொடுப்பேன்" இப்படி நிறைய உண்டு.

இன்றைய உலகத்தில் உள்ளது உள்ளபடி பேசும் மனிதர்கள் மிகவும் அபூர்வம். நினைப்பதொன்று – பேசுவதொன்று– செய்வதொன்று– இடைவெளி ரொம்பவும்அதிகமாகி விட்டது. இப்பொழுது நம்மிடம் இருப்பதெல்லாம் ஒப்பனை முகங்கள்.

உண்மையான மனிதனின் முகம் வேறு! ஓர் ஊரில் ஒரு பெண் இருந்தாளாம். அவளுக்கு இந்த உலகத்திலேயே பிடிக்காத ஒரு பொருள் என்னவென்றால் முகம் பார்க்கிற கண்ணாடி தான்!.

ஏனென்றால் அந்தக்கண்ணாடியில் தன்முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் அது அழகாக இல்லையாம். தன்முகம் அழகாக இல்லாததற்கு காரணமே கண்ணாடி தான் என்று முடிவு பண்ணி விட்டாள். அதனால் முகம் பார்க்கிற கண்ணாடியை எங்கே பார்த்தாலும் அதைத் தூக்கிப் போட்டு உடைக்க ஆரம்பித்துவிட்டாளாம்.

இப்படி ஒரு கதை உண்டு.

இப்ப சொல்லுங்க!

அந்தப் பெண்ணைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவள் ஒரு பைத்தியக்காரி என்பீர்கள். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.

ஆனால் பெரியவர்களெல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால்... அந்தப் பெண் வேறுயாருமில்லை, அது நீங்கள் தான் அப்படியென்று நம்மை நோக்கிக் கையை நீட்டுகிறார்கள். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் – நாம் எல்லோருமே நம் வாழ்க்கையில் அந்தப் பெண் மாதிரித்தான் நடந்து கொள்கிறோம்.

நம்முடைய உண்மை நிலையை எதெல்லாம் பிரதிபலிக்கிறதோ அதிலிருந்தெல்லாம் நாம் தப்பிக்க நினைக்கிறோம். ஏனெனில் அது நமக்குத் திருப்தியளிப்பதில்லை. இது ஓஷோவின் கருத்து.

இன்றைக்கு மனிதன் என்ன செய்கிறான் தெரியுமா?

தன்னுடைய ஆணவத்துக்குத் தீனி போட்டுக் கொண்டே இருக்கிறான். எல்லாம் தன்னால் தான் நடக்குது என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அவன் இல்லாமலே எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது.

ஒரு ஆள் அவன்பாட்டுக்குப் போய்க்கொண்டே இருந்திருக்கிறான். இருட்டு நேரம் வழியில் ஒரு பெரிய கிணறு. எட்டிப் பார்த்திருக்கிறான்..

உள்ளே கிணற்றுத் தண்ணீரில் நிலா தெரிந்திருக்கிறது. உயரே ஆகாயத்தில் இருக்கும் நிலவின் நிழல் அதில் பிரிதிபலிக்கிறது.

உடனே அவன் என்ன நினைத்தான் தெரியுமா?

"ஐயோ... பாவம்... நிலா கிணற்றில் விழுந்து விட்டதே... அதை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமே என்று நினைத்தான்.

உடனே ஓடிப்போய் ஒரு நீளமான கயிற்றைக் கொண்டு வந்திருக்கிறான் அதை உள்ளே விட்டிருக்கிறான்.

இந்தா இந்தக் கயிற்றைப் பிடித்துக்கொள் என்றான். அந்த நேரம் பார்த்து அந்தக் கயிறு உள்ளே எங்கேயோ வசமாக சிக்கியிருக்கிறது.

"ஆகா... நிலா பிடித்துக் கொண்டது" என்று நினைத்தான்.

அதன் ஒரு முனையைப் பிடித்துப் பலமாக இழுத்தான். திடீரென்று உள்ளேயிருந்த சிக்கல் விடுபட்டுப் போய்விட்டது. அப்படியே ஓடிப்போய் மல்லாக்க விழுந்தான்.

மூச்சு வாங்குது. உயரே பார்த்தான். வானத்தில் நிலா தெரிந்தது. உடனே இவன் சொன்னானாம்.

"நல்லவேளை! நான் வந்து காப்பாற்றியதால் நீ உயிர் பிழைத்தாய்" என்றானாம்.

இன்றைக்கு மனிதனுடைய நினைப்பு இப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டுமானால்...

மனிதனுடைய ஒப்பனை முகம் கலைய வேண்டும். உண்மையான முகம் வெளியே வரவேண்டும். இதுதான் நமது புத்தாண்டு விருப்பம்.

ஒருத்தன் கேட்டானாம் :

"டேய்! உனக்குப் புத்தாண்டு வாழ்த்து அனுப்பியிருந்தேனே... கிடைத்தா?"

"ஓ! கிடைத்ததே" என்றிருக்கிறான் நண்பன்.

"ஏண்டா பொய் சொல்லுகிறாய்? உனக்கு நான் வாழ்த்தே அனுப்பவில்லையே" என்றான் அவன்.

அதற்கு இவன்,

"நீ மட்டும் அனுப்பினேன் என்று பொய் சொல்லும் போது நான் அது வந்து சேர்ந்தது என்று பொய் சொல்லக்கூடாதா? என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கணனி கற்கை நிலையங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்களின் பயன்பாடு தொடர்பான மதிப்பீட்டாய்வு நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கணனிக் கற்கை நிலையங்கள் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடங்களின் பயன்பாடு தொடர்பாக மதிப்பீடு செய்யும் ஆய்வு நடவடிக்கையொன்று கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறிப்பிட்ட நிலையங்கள் கல்வி மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்படும் விதம் தொடர்பாக கண்டறிந்து மேலதிக அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்தும் நோக்கத்துடன் இந்த மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சில பாடசாலைகளில் இலத்திரனியல் வலையமைப்பு மற்றும் இணையத்தள வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவினையும் விஞ்ஞான அறிவினையும் விருத்தி செய்யும் வகையில் பெருமளவு நிதியைப் பயன்படுத்தி இந்த வளங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான வசதிகள் பாடசாலைகளில் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு உரிய இலக்குகளை அடையப் பெற்றுள்ளதா என கண்டறியும் நோக்கத்துடன் விசேட ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயற்திட்ட அதிகாரி தெரிவித்தார். (2-4)

## ஊவா வெல்லஸபல்கலையின் புதிய மாணவர்க்கான தகுதிகாண் பரீட்சை

ஊவா வெல்லஸ பல்கலைக்கழகத்தில் மாணவர்களைச் சேர்க்கும் பொருட்டு தகுதிகாண் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இந்த பரீட்சை எதிர்வரும் 17, 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறும் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய 6 ஆயிரத்து 403 பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-4)

## ஆசிரியர்களுக்கான முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்களுக்கான முக்கிய கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதால் இதில் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுக்கொள்கின்றார். (2-4)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இவ்வுற்சவத்தில் புத்தாண்டு தினமான இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு இரதோற்சவம் நடைபெறவுள்ளது.

இதில் சிறப்பு நிகழ்வாக யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி. காரை.எம்.பி அருளாநந்தன் தேர்த்திருவிழா மகத்துவம் எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (2-4)

## புதுவருடத்தில் அனுஷ்டிக்க வேண்டியவை

**புதுவருடத்தில் அனுஷ்டிக்க வேண்டியவை**

யாவரும் இப்புண்ணிய காலத்தில் விதிப் படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து சிரசில் விளாவிலையும் காலில் கடப்பமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து பொன்நிறமுள்ள பட்டாடையாயினும் வெள்ளை சிவப்புக்கரை அமைந்த பட்டாடையாயினும் அல்லது பச்சை நிறம் கலந்த பட்டாடை, பச்சைக் கரை அமைந்த வெள்ளைப்புது ஆடையாயினும் தரித்து ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம்பூசி, நறுமலர்சூடி, விநாயகர் முதலிய குல தெய்வங்களை வழிபட்டு சூரியனுக்கு பொங்கல் பூசை செய்து, குரு, பெற்றோரிடம் ஆசி பெற்று, தானதருமங் கள் செய்து, உற்றார், உறவினர், நண்பர்களுடன் இனிமையாகப் பழகி மங்கலகரமாக புதுவருடத்தின் வரவேற்க கடவர்.

**விகிர்தி வருட கைவிசேடம் வாக்கிய பஞ்சாங்கம்**

15.04.2010 வியாழன் காலை 6.49 மணிமுதல் 7.44 மணிவரை, 15.04.2010 வியாழன் முற்பகல் 9.59 மணி முதல் 11.58 மணிவரை, 15.04.2010 வியாழன் பிற்பகல் 3.10 மணி முதல் 4.06 மணி வரை.

**திருக்கணித பஞ்சாங்கம்**

15.04.2010 வியாழன் காலை 6.02 மணி முதல் 9.50 மணி வரை, 15.04.2010 வியாழன் பிற்பகல் 3.19 மணி முதல் 6.00 மணிவரை, 18.04.2010 ஞாயிறு காலை 6.01 மணி முதல் 7.37 மணி வரை.

## இராசி பலன்

*14-04-2010*
*(சித்திரை 01, புதன்கிழமை)*
*அமாவாசை மாலை 6.36 மணிவரை*
*ரேவதி பிற்பகல் 5.34 மணிவரை*
*இராகுகாலம் 12.05-1.35 மணிவரை*
*சுபநேரம் 4.35-6.05 மணிவரை*
*தமிழ், சிங்கள புதுவருடப்பிறப்பு*
*மானிப்பாய் மருதடி விநாயகர் தேர், கீரிமலை நகுலேஸ்வராலய தேவி தேர், தாவடி விநாயகர் தேர், வல்வெட்டித்துறை முத்துமாரி தேர், வண்ணை காமாட்சி அம்மன் தேர், மல்லாகம் பழம்பதி முருகன் கொடியேற்றம்.*

| | |
|---|---|
| மேடம் | சோம்பல் நிலை, காரிய தாமதம், சுபசெலவு, தெய்வ தரிசனம். |
| இடபம் | நல்ல வரவேற்பு, எடுத்த காரியம் கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, போசன சுகம். |
| மிதுனம் | அதிகாரம், உறவினர் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை. |
| கடகம் | சுபசெலவு, பெரியோர் சந்திப்பு, பிரயாணம், புதிய முயற்சி. |
| சிங்கம் | எதிர்பாராத பகை, காரிய தடங்கல், போசன சுகம், ஆரோக்கியக்குறைவு. |
| கன்னி | தெய்வ தரிசனம், மனோதைரியம், உறவினர் வருகை, விருந்து பசாரம். |
| துலாம் | மனமகிழ்ச்சி, புதிய பொருள் சேர்க்கை, தெய்வசிந்தை, முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | உறவினர் சந்திப்பு, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதமாகும், பணக்குறைவு. |
| தனுசு | தன்னம்பிக்கைக்குறைவு, சுபகாரியச் செலவு, மூதா சுகம், நல்ல முயற்சி. |
| மகரம் | பாராட்டு, எடுத்த காரியம் கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, விருந்துபசாரம். |
| கும்பம் | போசன சுகக்குறைவு, பணவிரயம், அமைதிக்குறைவு, முயற்சி தாமதம். |
| மீனம் | தெய்வ தரிசனம், பெரியோர் சந்திப்பு, வெகுமானம், போசன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 60 |
| தக்காளி | 70 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50-60 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 60 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 200 |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 50 |
| கீரை – 1 பிடி | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 120 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 35 |

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010


புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

பல சரக்குப் பொருட்கள் மிக்சர்
தயாரிப்பிற்கான பொருட்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

**ஜெகன் களஞ்சியம்**

இல.285, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.



இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

நவீன தொழில் நுட்பத்தில் என்றும் ரம்மியமான, சகல விதமான
ஆபரண கட்டிங் வேலைகட்கு!

**அன்ரனி ஜீவல்ஸ்**
**Antony Jewels**

**டிசைனேர்ஸ்**
**Designers**



இல.149-4A
கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

தொ. பே: 021 222 4392
077 6264650



மலரும் சித்திரைப் புத்தாண்டு மகிழ்ச்சிகரமாக
அமைய வாழ்த்துகின்றோம்.

**தட்ஷா அழகுக்கலையகமும்**

**பயிற்சி நிலையமும்**

- பெண்களுக்கான அழகுக்கலை அலங்காரம்
- அனைத்து வகையான முக ஒப்பனைகள்
- மெனிகியூர், பெடிகியூர் & நகஅலங்காரம் (Nail Arts)
- நவீன வடிவில் தலை அலங்காரங்களுக்கு

இல.84, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 9713, 077 4030909,
077 3383643



**சிறி நதியா**
டிஜிட்டல் கலர் லாப்
வீடியோ & ஸ்ரூடியோ




லக்ஸன் பிளாஸா கட்டடம்
108A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2228412

இனிய வாழ்த்துக்கள்

**சிறி நதியா**
நகை மாளிகை




01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2222709

கிளை:
56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2226744



இனிய சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

டேவிற் பீரிஸ் மோட்டார் கொம்பனி பிறைவேட் லிமிடெட் இன் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்

**S.J. மோட்டோர்ஸ்**



இல. 73, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்



தொ.பே: 021 2224554, 0777 238373



எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்.

✓ PC Assembling ✓ Computer Networking ✓ PC Upgrading ✓ Software Development ✓ PC Trouble shooting
✓ Virus Protection ✓ PC Service & Software installation

புதுவருடத்தை முன்னிட்டு மிகக்குறைந்த விலைகளில் கணனிகளை பெற்றுக்கொள்ள!

WebCam A4 Tech, Casing Powerlogic, Bluetooth Dongle, Card Reader, PCI Modem, Woofer, D-Link Router
PCI TV Capture Card, Laptop Speaker, USB Light, Recovery Card, hp No.1 Toners,
Computer Table, PCI Modem, Printer

3 வருட உத்தரவாதம்!

நம்பிக்கை - உத்தரவாதம் - நிரந்தரம்

விற்பனைக்கு பிந்திய சேவைகள்

**PCST PC SOLUTIONS**
TECHNOLOGIES (PVT) LTD

305, Kasthuriyar Road, Jaffna.
Tel :- 021 222 1101

M.M.V Nelliaddy Road,
Tel :- 021 2264999

# திக்கம் வடிசாலை மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சுமூகமான முறையில் திக்கம் வடிசாலையை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கைத் தெரிவித்தார்.

திக்கம் வடிசாலை கடந்த சில காலமாக இயங்க முடியாது இருக்கின்ற நிலையில் இதன் காரணமாக தனது யாழ் பணி மனையில் திக்கம் வடிசாலை ஊழியர்களையும் தொழிற் சங்கப் பிரதிகளையும் அமைச்சர் டக்ளஸ் சந்தித்துக் கலந்து ரையாடினார்.

இதன்போது சுமூகமான முறையில் வடிகாலை இயக்க வேண்டும் என்பதுடன் இதன் மூலம் சகல தொழிலாளர்களும் பலன் அடைய வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே தமது நோக்கம் என்று தெரிவித்த அவர் வடிசாலையை மீண்டும் விரைவில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார். (2)

# அஞ்சலிக்கூட்டமும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அமரத்துவமடைந்த நீர்வையூர் சமூக சேவகர் கா. சிவபாலனின் அஞ்சலிக் கூட்டமும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் *வாழைச் செய்கையில் நவீன முகாமைத்துவம்* என்ற தலைப்பில் யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் கருத்துரை வழங்குவார்.

நிகழ்வில் அஞ்சலியுரைகளை நீர்வேலி கந்தசுவாமி கோவில் பிரதம குரு இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள், செல்வக் கதிர்காம தேவஸ்தானப் பிரதம குரு நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்கள், அரச கேசரிப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம குரு சா. சோமதேவக் குருக்கள்; வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா, கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், நீர்வேலி கந்த சுவாமி கோவில் பரிபாலனசபை பதில் செயலாளர் க. மகாலிங்கம், நீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றத் தலைவர் பூ.கஜன் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிறைவுரையினை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை நிகழ்த்தவுள்ளார். (2-4)

## நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அதன் பழைய மாணவரும் முற்போக்கு எழுத்தாளருமான நீர்வைப் பொன்னையன் ஒரு தொகுதி நூல்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (2-4)




# சிறந்த நூலாக்கத்திற்கான தெரிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2010 ஆம் ஆண்டின் சிறந்த நூல்களுக்கான எழுத்தாளர்களை தெரிவு செய்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாவல், சிறுவர் இலக்கியம், சிறுகதை, இலக்கிய ஆய்வும் விமர்சனமும், கவிதை, உயர்கல்வி, நாடகம் போன்ற துறை சார்ந்த எழுத்தாளர்கள் வடக்கு மாகாண சபைக்குட்பட்ட 5 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படவுள்ளனர்.

போட்டிக்கு அனுப்பப்படும் நூல்கள் 2009 ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்பும் பிரதேச எழுத்தாளர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவிடம் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம் என நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (2-30)

## புதுவருட ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நிலையத்தில் இடம்பெற்றுவரும் தேசியக் கல்வி நிறுவக கல்வி மாணி கற்கை நெறி முதலாம் வருட மாணவர்களின் புதுவருட ஒன்று கூடல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் அன்ரன் நா. விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராகத் தேசியக் கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறி இணைப்பாளர் திருமதி சு.வில்வநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-4)

## ஐக்கிய தீபம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் *ஐக்கிய தீபம்* மார்ச் மாத இதழ் வெளிவந்துள்ளது.

கூட்டுறவு தொடர்பான கட்டுரைகள், செய்திகள், நிகழ்வுப்படங்கள், கவிதைகள் என்பன இவ்விதழில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (2)

## தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலின் மஹோற்சவத்தை முன்னிட்டு தெய்வீகப் பேருரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

தினமும் பி.ப 6.30 மணிமுதல் 7.30 மணிவரை இடம்பெறும் இந்நிகழ்வில் வளர் இளம் சொற்பொழிவாளர்கள் பங்கேற்று வருகின்றனர். (2-4)

# க.பொ.த (சா/த) பரீட்சை சிறந்த பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணக்கல்லூரி**

***ஆங்கிலமொழி மூலம்***

எம். கர்ஷன் - 7ஏ, 2 சி, பி. திவாகரன் - 6ஏ, பி, 2சி, எம். சாம்பவி - 6ஏ, 3சி, பி. திலிபராஜ் - 5ஏ, 3பி, சி, எஸ். மதுஷன் - 5ஏ, 2பி, 2சி, கே. பிரதீபன் - 5ஏ, பி, 2சி, எஸ், எஸ். சஜீவன் - 5ஏ, 3சி, எஸ், எஸ். சோபிகா - 4ஏ, 3பி, 2சி, டி.ஸ்ரீபென் - 4ஏ, 2பி, 2சி, எஸ், எஸ். கிஷோர் - 4ஏ, பி, 2சி, எஸ்.

***தமிழ்மொழி மூலம்***

எம். பிரதீபன் -4ஏ, 3பி, 2சி, எஸ். சிவானி - 5ஏ, 2பி, 2சி, எஸ். யதூஷன் - 4ஏ, 3பி, சி, எஸ், எஸ். சிவசக்தி - 4ஏ, 2பி, 2சி, எஸ், ர. வேணுகுமரன் - 4ஏ, 2பி, 2சி, எஸ், வி. சோபிநாதசுவன் - 4ஏ, பி, 2சி, 2எஸ்.

## ஆடைகளை திருடியவர் வியாபாரிகளிடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் நடைபாதைகளில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வரும் ஆடைகளை திருடிய இளைஞன் ஒருவர் வியாபாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டான்.

நேற்று முன்தினம் மாலை வேளையில் சன நெரிசல் அதிகமாக இருந்தவேளை ஆடைகளை வாங்குவது போன்று பாசாங்கு செய்த அவர் புதிய ஆடைகளை பை ஒன்றிற்குள் வைத்துக் கொண்டு சென்றார்.

இதனை அவதானித்த வியாபாரிகள் குறித்த இளைஞன் நையப்புடைக்கப்பட்டு எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டார். (2-30)

### பக்தி பூர்வமாக இடம்பெற்ற

# பன்றித்தலைச்சி கண்ணகி அம்மனின் பங்குனித் திங்கள் இறுதி உற்சவம்

மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்பாளின் பங்குனித் திங்கள் உற்சவத்தின் நிறைவு உற்சவம் நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பாற்குடம் எடுத்தல், கர்ப்பூரச் சட்டி எடுத்தல், காவடி எடுத்தல் எனப் பல்வேறு நேர்த்திக் கடன்களைப் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் நிறைவேற்றினர். 12 வயது மதிக்கத்தக்க சிறுமியொருத்தி செடில் காவடி எடுத்து வந்தது அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தது. (2-4)

## மாதாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவை அலுவல்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் மாவட்ட சமூக சேவை அலுவலர் ஆ. ஞானவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. (2-4)





காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் உற்சவ காலத்தில் சமயமும் தமிழும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய தமிழருவி த. சிவகுமாரனிற்கு ஆலய ஆதீன கர்த்தா க. பாலச்சந்திரன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் தமிழருவி த. சிவகுமாரன் சொற்பொழிவாற்றுவதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - ஐங்கரன்)

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010


அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



எரிக்கணேஷ்
பல் மூக்கு
கண்ணாடியகம்

இல 546,566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைகள்:
91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி.
86,கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

T.P.: 021 222 2488

வாடிக்கையாளர் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

சகல விதமான எசன்ஸ் வகைகள், கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் தயாரிக்கும் பொருட்கள், பிஸ்கட் வகைகள், வாசனைத்திரவியங்கள், ஆயுர்வேத மருந்துச் சரக்குகள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

தொ.பே.இல: 021 222 2219
161A , கே.கே.எஸ். வீதி, (சத்திரச்சந்தி), யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

லாவண்யா பல் மூக்கு கண்ணாடி அகம்.



வடமராட்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது நெல்லியடிக் கிளை தினமும் திறந்திருக்கும். மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப்பற்கள், மிதப்புப்பற்களுக்கான நிரந்தர கிளிப் என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (போதனா வைத்தியசாலை முன்பாக)
தொ. பே. இல :021 222 9053
கிளை- பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (பொலிஸ் நிலையம் முன்பாக)

வாடிக்கையாளர், நண்பர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

வேல் முருகன் வாணிப நிலையம்
VELMURUGAN TRADERS

தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண பெயின்ட் வகைகளும் சுண்ணாம்பு மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்.

தொ.பே: 021 222 9437
இல. 56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

J.T ரான்ஸ்போட்

யாழ் → கொழும்பு
கொழும்பு → யாழ்

சகலவிதமான பொருட்களும் நியாயமான கட்டணத்தில் கொண்டுவந்து தரப்படும்




39 வருடகாலம் மதிப்போடு விளங்கும்

யாழ். வணிக நிலையம்
Jaffna Traders

இல: 336, 338 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

குழந்தைகளின் பால்மா , பிஸ்கற் வகைகள், பெண்களுக்கான கீறிம் வகைகள், குளிரூட்டப்பட்ட அங்கர்பட்டர், மாஜரின் வகைகள், குரக்கன், எள்ளு, தேயிலை மற்றும் சகல வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

J.T ரான்ஸ்போட்
இல.302 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

# களம் பல கண்ட யாழ் கோட்டை 3

## பிலிப் தே ஒலிவேறா

**1621 பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி** நல்லூரிலிருந்து போர்த்துக்கேய ஆட்சியை பிலிப் தே ஒலிவேறா நடத்திய போதிலும் தமிழர்களுடன் நடந்த போர் முடியவில்லை. சுதந்திர வேட்கை கொண்டு கிளர்ந்தெழுந்த தமிழ் வீரர்கள் தங்களது தாயக மண்ணிலிருந்து அந்நியரைத் துரத்தி விடும் எண்ணம் கொண்டவர்களாக இடைக்கிடையே படைதிரட்டிப் பறங்கிகளைத் தாக்கி வந்தனர். வருணகுலத்தான் என்பான் தஞ்சாவூர்ப் படை யொன்றுடன் ஒலிவேறாவை எதிர்த்துத்



யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்காக ஒல்லாந்தப்படை பண்ணைக் கரையில் முகாமிட்டுள்ளது. பான்ஸ்வன்வஹ"ன்ஸ் முன் காணிக்கை பொருட்களை யாழ்ப்பாண மக்கள் சமர்ப்பிக்கின்றனர். (பால்தேயஸ் பாதிரியார் வரைபு-1672)

தோல்வி கண்டான். பின்னர் சின்ன மீகாப்பிள்ளை என்பான் தமிழ்ப்படையொன்றுடன் தொண்டைமானாற்றில் இறங்கி நல்லூரை முற்றிகையிட்டு தோல்வி காண நேர்ந்தது. தஞ்சாவூர் நாயக்கன் அனுப்பிய மற்றொரு படையும் தோல்வியுற்றுத் திரும்ப நேர்ந்தது.

நல்லூரில் சமதரையில் கிளர்ந்தெழும் தமிழர்களுக்கு மத்தியில் தங்கியிருப்பதிலுள்ள பாதுகாப்பின்மையைப் போர்த்துக்கேயத் தளபதி புரிந்துகொண்டான். தானும் தனது படை வீரர்களும் பறங்கிகளும் தங்கியிருப்பதற்குப் பாதுகாப்பான ஒரு கோட்டை இருக்கவேண்டியதன் அவசியத்தை ஒலிவேறாவுக்குத் தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதல்கள் உணர்த்தின. அதனால் நல்லூரில் இடித்துக்குவிக்கப்பட்ட கற்களைப் பயன்படுத்தி பண்ணையில் ஒரு கோட்டையைக் கட்டி முடிக்கப் பிலிப்தே ஒலிவேறா விரும்பினான்.

முஸ்லிம் வர்த்தகசாலைகள் அமைந்திருந்த இடம் கோட்டை அமைப்பதற்கான மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்திரே புர்தாடு டி மென்டொன்சாவினால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்ட முஸ்லிம் பண்டகசாலைகள் இருந்த இடத்தில் யாழ்ப்பாணத்தின் கோட்டையைக் கட்டத் திட்டமிடப்பட்டது. அவ்விடத்தின் அமைவிடம் பலமான கோட்டையொன்றினை அமைப்பதற்கு மிக வாய்ப்பானதாக விருந்தது.

போக்குவரத்துக்கு வாய்ப்பான கடனீரேரி அருகிலிருந்த கொழும்புத்துறை, அலுப்பாந்தித்துறை அகழிகளுக்கு நீர் தரக்கூடிய கடல், பகைவர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு வழங்கக்கூடிய இடவமைப்பு என்பன ஒலி வேறாவுக்கு திருப்பதியைத்தந்தன. தமிழ்ச் சைவர்கள் வாழும் நல்லூர் நகரிலிருந்து விலகிப் பாதுகாப்பான அரண் ஒன்றினை அமைத்துக் கொள்வதுடன் , கத்தோலிக்கர்கள் மட்டும் வாழ்கின்ற *பறங்கித் தெரு* (சீதாரி) என்ற புதியதொரு நகரினையும் உருவாக்க அவன் எண்ணம் கொண்டான்.

கோட்டை கட்டுவதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அதனைக் கட்டுவதற்கான கற்கள் அவ்விடத்தில் சேகரிக்கப்பட்டன. முதற் கட்டமாக நல்லூர் பெரிய கோயிலை இடித்ததால் குவிந்து கிடக்கும் கற்குவைகள் அவ்விடத்திற்கு கொண்டு வரப்பட்டன. முருகைக் கற்கள், சுண்ணாம்புக் கற்கள், செங்கட்டிகள் என்பன பாரிய கூடார வண்டிகளில் முதலில் ஏற்றப்பட்டுப் பண்ணைக் கரையில் சேர்க்கப்பட்டன.



அவை காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது என்பதையுணர்ந்த ஒலி வேறா யாழ்ப்பாண மக்களையும் தனது படை வீரர்களையும் நல்லூரிலிருந்து பண்ணை வரை மனிதச் சங்கிலியாக வரிசையாக நிற்கவைத்துக்கற்களை வேகமாகக்கரம் மாற்றி அனுப்பி பண்ணைக் கரையில் குவிப்பத்தான்.

அது ஆலயங்களின் கற்களையும் பண்ணைக் கரையில் சேர்ப்பித்தான். குவிக்கப்பட்ட கற்கள் கோட்டை கட்டுவதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை. எனவே எஞ்சிய கோயில்களையும் அவசியமாயின் சைவரின் பெரும் வீடுகளையும் அவன் இடித்துத் தள்ளிவிடுவான் என்ற பயத்தில் கோட்டை கட்டுவதற்குத் தேவையான முருகைக் கற்களை யாழ்ப்பாணத்திற்கு அருகில் இருக்கும் தீவுகளிலிருந்து தோணிகள் மூலம் சேகரித்துத் தருவதாக யாழ்ப்பாணத்து முதலியமார்களும் வன்னிமைகளும் வலிந்து ஒத்துக் கொண்டனர்.

அதற்குரிய செலவினைத் தருவதாக ஒலிவேறா ஒப்புக்கொண்டான். அயற் தீவுகளில் இருந்து முருகைக்கற்கள் தோணிகள்



மூலம் கொண்டுவரப்பட்டன. ஒவ்வொரு தோணி முருகைக்கற்களுக்கும் 3 பணம் வழங்கப்பட்டது. அதனால் தோணிகளை உடைய பலரும் இதில் ஈடுபட்டனர். வேலணை (தண்ணீர்த்தீவு) , புங்குடுதீவு , நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு முதலான தீவுகளைச் சேர்ந்தவர்கள் முருகைக்கற்களைச் சேகரித்து குவித்து தோணிகளுக்கு வழங்கினர். அதற்கு அரைப்பணம் பெற்றுக் கொண்டனர்.

அக்கற்களை ஏற்றிச்செல்லும் தோணிகளுடன் காவலாகப் போகும் அதிகாரத்துக்கு மாதம் ஒன்றுக்கு 13 பணம் சம்பளமாக வழங்கப்பட்டது. கோட்டை கட்டுவதற்குரிய சுதை தயாரிப்பதற்கான சுண்ணாம்பு கால்வாய்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டன. அவை சுண்ணாம்பு கற்களை சுட்டுப்பதமாக்கிப் பண்ணைக் கரையில் சேர்த்தனர். அவற்றோடு கலப்பதற்காக கோவாவில் இருந்து சர்க்கரை மூட்டைகள் பெருமளவிலும் எடுத்துவரப்பட்டன.

களி மண்ணும் அவற்றோடு சேர்ப்பதற்காக குளங்களில் இருந்து அகழ்ந்தெடுத்து குவிக்கப்பட்டது. சுட்ட சுண்ணாம்பும் , சர்க்கரையும் , களிமண்ணும் சேரும் போது முருகைக் கற்களைப் பலமாகப் பற்றும் சுதை உண்டாகிறது. இப்போது அனைத்தும் தயார்.

யாழ்ப்பாணத்தில் இருந்த சைவ ஆலயங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட முருகைக்கற்களும் சுண்ணாம்பு கற்களும் நீள் சதுர கனங்களாகக் கல் தச்சர்களினால் பொலியப்பட்டிருந்தன. அவ்வாறு பொழியப் பட்டிருந்தன. அவ்வாறு பொழியப்பட்ட கற்கள் , கோட்டையை இலகுவாக அமைப்ப

**செங்கை ஆழியான்**

தற்குப் போர்த்துக்கேயருக்கு உதவின. கோட்டை கட்டுவதில் போர்த்துக்கேய மேசன் மாருடன் உள்ளூர் மேசன் மார்களும் பங்கு கொண்டனர். தலைமை மேசன் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு பணமும் அவனுக்கு கீழ் வேலை செய்யும் மேசன்மார்களுக்கு நாள் ஒன்றுக்கு அரைப்பணமும் கூலியாக வழங்கப்பட்டது. (தொடரும்)

## தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதாக கூறப்படும் செய்திகளில் உண்மையில்லை

### இலங்கை கடற்படை மறுப்பு

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக வெளியாகும் செய்தியில் உண்மையில்லை என இலங்கைக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை கச்சதீவு பிரதேசத்தில் வைத்து தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக இந்திய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. 28 தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக் குறிப்பிடப்படுகிறது. எவ்வாறெனினும் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் எவ்வித அடிப்படை யயுமற்றவை என கடற்படை பேச்சாளர் கப்டன் அதுல செனரத்தெரிவித்துள்ளார்.

இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கு கடற்படையினர் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (2-4)

## மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 92 இலங்கை பணிப்பெண்கள் திருப்பி அழைக்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த 92 பணியாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து திருப்பி அழைக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் எல்.கே. றுகுனுகே இணையத்தளமொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

இவர்களில் 68 பேர் குவைத்திலிருந்தும் 26 பேர் சவூதி அரேபியாவிலிருந்தும் திருப்பி அழைக்கப்படவிருப்பதாகவும் அவர் கூறினார்.

இவர்களுக்கான உரிய சம்பளம் வழங்கப்படாமையும் தொழில் வழங்குனரால் துன்புறுத்தப்பட்டமையுமே திருப்பி அழைப்பதற்கான காரணம் என எல்.கே. றுகுனுகே குறிப்பிட்டார். (2-4)

## தமிழ் மக்களுக்காக ஐ.தே.கட்சி என்றென்றும் குரல் கொடுக்கும்

### ரவிகருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு

தமிழ் பேசும் மக்கள் சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசிய கட்சி தளராது குரல் கொடுக்கும். முக்கியமாக கொழும்பு மாவட்ட மக்கள் பல்வேறு பிரசாரங்களுக்கு மத்தியில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்துள்ளமை தொடர்பில் நன்றி வெளியிடுகின்றோம் என்று ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது,

பல்வேறு பிரசாரங்களுக்கு மத்தியில் மனந்தளராது கொழும்பு மாவட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்துள்ளனர். முக்கியமாக கொழும்பு மாவட்ட தமிழ் பேசும் மக்கள் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருக்கு அடுத்தபடியாக எனக்கு வாக்களித்து என்னை பிரதிநிதியாக தெரிவு செய்துள்ளனர்.

என்னை கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்த மக்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவிக்கின்றேன். அந்த மக்களுக்காக நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

யார் எவ்வாறான பிரசாரங்களை செய்து எங்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூறினாலும் மக்களுக்கு எங்களைப்பற்றி தெளிவாக தெரியும். நாங்கள் கடந்த காலங்களில் செயற்பட்டுள்ள விதம் குறித்து மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். அதனாலேயே எமக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

இதேவேளை கடந்த காலங்களில் கொழும்பு மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டபோது ஐக்கிய தேசிய கட்சி அவர்களுக்காக குரல் கொடுத்து வந்தது.

அதேபோன்று எதிர்காலத்திலும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக ஐக்கிய தேசிய முன்னணி தொடர்ந்து குரல் கொடுக்கும் என்பதனை தெரிவிக்கின்றோம். எந்தப் பிரச்சினை வந்தாலும் கொழும்பு மாவட்ட பிரதிநிதி என்ற வகையில் முன்னிற்பேன் என்றார். (2-4)

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010


அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்



ஆர்.வி.ஜி
மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள்
மற்றும் பால்மா வகைகள்
அனைத்தையும் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

R.V.G
ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 6808

அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
சுகாதார முறையில் உணவிற்கும் வைத்தியத்திற்கும் விஷேடமாக தயாரிக்கப்பட்டது.

VSP 1959

V.S.P லக் ஓயில்

தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 0212224135, 0212229165

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்



சாரங்கா நகை மாடம்
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6972

கிளை கொழும்பில் உதயமாகியுள்ளது
சாரங்கா ஜுவல்லரி
இல:55, செட்டியார் தெரு, கொழும்பு-11
T.P: 011 2434971 Fax: 011 2434071

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும்
சித்திரைப்புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

சாம்சன் கட்டடப்பொருள்
உற்பத்தியும் விற்பனையும்

கொங்கிறீட் கற்கள், கொங்கிறீட் தூண்கள் மற்றும் வீட்டு அலங்காரப் பொருட்கள், சீமெந்து, சீற், ஓடு, தகரம் மற்றும் கம்பி வகைகளும் பழைய, புதிய பனை மரங்கள், நிலை, கதவு, யன்னல் போன்றவற்றுடன் பூச்சாடிகளும், பூங்கன்றுகளும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே: 077 6630390, 021 4901677

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்

வெங்கடேஸ்வரா
ரான்ஸ்போர்ட் சேவிஸ்

- ஏ-9 பாதையூடாகப் போக்குவரத்துச் சேவை ஆரம்பித்து நடைபெறுகின்றது
- எவரும் எதிர்பாராத குறைந்த கட்டணத்தில் முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை
- பொருட்கள் ஒப்படைத்து மூன்று நாட்களில் கிடைக்கும்
- கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் அலுவலகங்களைக் கொண்டு இயங்குகின்றது

இன்றே நாடுங்கள்
உங்கள் தேவையை
இலகுவாக்குவதற்கு

125, 127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
127, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
T.P.: 021 222 8306

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010


புதுவருட சுபநேரத்தில் மக்கள் வங்கியுடன்
கொடுக்கல் வாங்கல் செய்து பெறுமதியான
புதுவருட பரிசுகளை பெறுங்கள்



இம்முறையும் சுபநேர பாரம்பரிய
சிநேகத்துடன் மக்கள் வங்கியில்
கொடுக்கல் வாங்கல் செய்து நீங்கள் பெறுவன,

ரூ.25,000 பெறுமதியான சேமிப்பு சான்றிதழுக்கு பெறுமதியான பரிமாறும் தட்டொன்று பரிசு

ரூ.15,000 பெறுமதியான சேமிப்பு சான்றிதழுக்கு பெறுமதியான பீங்கானொன்று பரிசு

அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் பரிசு

சகல வைப்புகளிற்கும் பொருத்தமான பரிசில்கள் யாழ் . பிரதேசத்தில் உள்ள மக்கள் வங்கியின் அனைத்து கிளைகள் மற்றும் சேவை நிலையங்களும் 2010 ஏப்ரல் 14 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் புதுவருட கொடுக்கல் வாங்கல்களுக்காக திறந்திருக்கும்.

எமது சுபநேர கொடுக்கல் வாங்கல் பரிசை
எடுத்துச் செல்ல வாருங்கள்

2008 2010 | 2009 | 2009

மக்கள் வங்கி

www.peoplesbank.lk



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய புதுவருட வாழ்த்துக்கள்

## L கிருபா லேணர்ஸ் L

யாழ் நகரில் முன்னணி பயிற்றுவிப்பாளர்கள்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
பதிவு எண் D.S.589

- எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்த விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- ரெயல் பரீட்சையில் சித்தியடைய வான், ஓட்டோ மற்றும் சிறிய ரக, பெரிய ரக மோட்டர் சைக்கிள்களில் விசேட வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- அரச, தனியார் ஊழியர்களுக்கு தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்.
- நலன்புரி முகாம்களில் இருந்து வந்தவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
- தவணை முறையிலான கட்டணம்.
- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மிக விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற ஒழுங்குகள் செய்து தரப்படும்.

உரிமையாளர் அ.கிருபாகரன்

தலைமை: 226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 2224353
0777225292

கிளை: மகாத்மா வீதி,
நெல்லியடி
தொ. பே: 021 3006550



புத்தாண்டே வருக! புது வாழ்வு தருக!!

Dulux







AkzoNobel

கட்டடப்பொருட்கள், மிற்சுயி நிப்போன் சீமெந்து, Akzonobel பெயின்ற் வகைகள் ( எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ), நஷனல் பி.வி.சி (National PVC) குழாய்கள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

## கஜமுகன் ஹாட்வெயர்

147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021 222 2833

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



இன்று புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இது விகிர்தி வருடம். இற்றை நாள் வரை பட்ட துன்ப துயரங்கள் நீங்கி, இன்னல், இடுக்கண்கள் அகன்று எல்லோரும் இன்புற்று வாழ இந்த விகிர்தி வருடம் வகை செய்தல் வேண்டும். அனைத்து மக்களுமே ஆனந்தமும் அமைதியும் பெற்ற மங்கலகரமான சுபீட்சம் நிறைந்த இனிய வாழ்வு வாழ எல்லாம் வல்ல நல்லைக் கந்தன் திருவருள்புரிய வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

பிறக்கின்ற புத்தாண்டில் துன்பம் நீங்கி எல்லா மக்களும் இன்புற்று வாழ எனது நல்லாசிகளை உவகையோடு வழங்கி உளம் மகிழ்கின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

**ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
**நல்லை ஆதீன குருமுதல்வர், இரண்டாவது குருமஹா சந்நிதானம்,**
**திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.**

## சைவக் குருமார் சம்மேளன சிவாச்சார்ய பீடாதிபதியின் ஆசிச் செய்தி



புத்தாண்டு நன்நாளில் புதுமை காண்போம், புதியவை படைப்போம், புதிய வரலாற்றை உருவாக்குவோம். தமிழர் வரலாற்றில் கறை படிந்த விரோதி ஆண்டு விடை பெற்று இன்று விகிர்தி ஆண்டு பிறக்கின்றது.

இன்றைய தமிழ் புத்தாண்டு நன்நாளில் பல வருடங்களுக்கு பிறகு எமது தேவஸ்தான பிரம்மோற்சவம் கொடியேற்றம் ஆரம்பமாவது ஒரு சிறப்பு அம்சமாகும்.

எனவே எம்மக்களுக்கு எல்லாம் வல்ல அம்பிகையின் அருட் கடாட்சம் கிட்ட பிரார்த்திப்பதோடு என் அன்பிற்கினிய மக்கள் அனைவருக்கும் எனது உள்ளார்ந்த தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் உரித்தாக்குகின்றேன்.

*சர்வே ஜனகா சுகினோ பவந்து*
*சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு*

**சிவஸ்ரீ .சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் (ஜே.பி),**
**(சிவாச்சார்ய பீடாதிபதி,அகில உலக சைவக்குருமார் சம்மேளனம் பிரதம குரு,**
**வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)**

## சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத் தலைவரின் புத்தாண்டு ஆசிச் செய்தி



பழையன கழிதலும்,புதியன புகுதலும் என்பதற்கிணங்க வருடம் ஒன்று கழிந்து புதிய வரு டம் உதயமாகின்றது.

ஒவ்வொரு மனிதனும் நல்ல சிந்தனைகளையும் நல்ல செயல்களையும் மனதிற்கொள்ளவும் செயற்படுத்தவும் இவ்வாறான புதிய ஆரம்பங்கள் மிகவும் அவசியமாகிறது.

மக்கள் அனைவரும் புதிதாய் பிறக்கும் ***விகிர்தி*** வருஷத்திலே நல்ல முறையில் தங்கள் வாழ்க்கையை அமைத்து வளம் சேர்க்க வேண்டும். செல்வமும், சிறப்பும், ஆரோக்கியமும் பெருக வேண்டும். தீய எண்ணங்கள் யாவும் மனதை விட்டு விலகி நல்ல சிந்தனைகள் ஓங்க வேண்டும். இறையருள் எல்லா மானிடர்க்கும் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்துப் பிறக்கும் புதிய வருடத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்வோம் என்று வாழ்த்தி வணங்குவோமாக.

*லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து*

**சிவஸ்ரீ. ப.மனோகரக்குருக்கள்**
**தலைவர் ,**
**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.**

## செஞ்சொற்செல்வரின் புத்தாண்டு செய்தி



இனிய அன்புள்ளங்களே, இறையருளோடும் பெரியவர்களின் ஆசியோடும் புத்தாண்டை வரவேற்போம். ஆலயங்களையும் எம்மை ஆளாக்கிய பெற்றோரையும் இந்நாளில் நன்றியோடு வணங்குவோம். உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் வாழ்த்துக் கூறி அன்பின் வலிமையைப் பெருக்குவோம். எம் திருநாட்டின் எதிர்காலம் குறித்து அறிவு பூர்வமாகச் சிந்தித்துப் புதிய காரியம் ஆற்ற எண்ணுவோம்.

எம்மை நாம் எடை போட்டு விடைபெறும் ஆண்டில் நாம் விட்ட தவறுகளை புதிய ஆண்டில் தொடராது விலத்த வழிதேடுவோம். நாம் செய்த தவறுகளுக்காக இறைவனை மன்றாடுவோம். எமக்குத் தீமை செய்தவர்களையும் நல் மனதோடு மன்னித்து அரவணைப்போம்.

வாழ்நாளின் பெறுமதியை உணர்ந்து வாழும் நாளைப் பெறுமதியாக்குவோம். எங்கள் உளநலத்தையும் உடல் நலத்தையும் பேணத் திட்டமிடுவோம். அல்லலுறும் மக்களுக்கு உதவ முன்வருவோம். எம்மைச்சூழவுள்ள அறியாமை என்னும் இருளை அகற்ற உழைப்போம். ஒவ்வொருவரும் தத்தம் சொந்த உழைப்பில் வாழ்வதற்கு ஆற்றுப்படுத்துவோம். ***விகிர்தி*** வருடம் வெற்றி தரும் வருடமாக அமையவேண்டி அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைச் சமர்ப்பித்து அமைகிறேன்.

**ஆறு.திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.**

# புத்தாண்டே வருக!

அறியாமை யிருள் அகன்று விலகிட
அறிவொளி அருளொளி இணைந்து துலங்கிட
நெறிமுறை நிலந்தனில் நீதியாய் நடந்திட
பிரியமுடன் அழைக்கின்றோம் புத்தாண்டே வருக!

மக்கள் மக்களை மனதால் மதிக்க
சிக்கலின்றி வாழ்வு சிறந்து விளங்க
இக்கரையில் எமையெலாம் இறைவன் காக்க
அக்கறையொடு அழைக்கின்றோம் புத்தாண்டே வருக!

அரும்பாய் உருவாகி அன்பு தளிர்க்க
உருவான தளிரில் உவகை மலர
கரும்பாய் வாழ்வு கனிந்து இனிக்க
விருப்புடன் அழைக்கின்றோம் புத்தாண்டே வருக!

*குளப்பிட்டி-க. அருமைநாயகம்*

## சித்திரையின் முத்திரை

காலமகள் புத்தாண்டில்
காலூன்றும் சித்திரைதான்
நாளைய நல் வாழ்வின்
நம்பிக்கை முத்திரையாம்
சித்திரையின் பைங்கொடியில்
சிரிக்கும் புதுமலரில்

தித்திப்பு முத்தமிடத்
தென்றல் வந்து தாலாட்டும்
ஆடுகின்ற பூவிதழோ
அன்பின் மதுத்துளியைப்
பாடிவரும் தேனீக்கே
பரிசாய் விருந்தூட்டும்

*புலவர் செ.பரமநாதன், மண்டைதீவு.*

## ஒளிமயமான எதிர்காலத்தை தோற்றுவிப்பதாக சித்திரைப் புத்தாண்டு அமையப் பிரார்த்திப்போம்!

நாட்டின் நெருக்கடியான நிலைமைகளும் தமிழ் மக்கள் அனுபவித்துவந்த இன்னல்களும் துயரங்களும் தொடரக்கூடாது என்ற நம்பிக்கையுடன் மற்றுமொரு சித்திரைப் புத்தாண்டை வரவேற்கின்றோம். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் எமது மக்களுக்கு ஏற்பட்ட வேதனைகளின் வடு இன்னமும் மறையவில்லை. பழையன கழிதலும், புதி யன புகுதலும் என்ற மரபிற்கமைய நம்பிக்கைகளையும், புதிய எதிர்பார்ப்புகளையும் வைத்து புத்தாண்டு வரவேற்கப்படுவதால், தமிழ் மக்களது வாழ்வில் சிறப்பானதொரு எதிர்காலத்தை தோற்றுவிப்பதாக இப்புத்தாண்டு அமையவேண்டும் என்பதே அனைவரினதும் பிரார்த் தனையாக இருக்கிறது. தமிழ் மக்கள் மகிழ்ச்சிகரமாகவும் நிம்மதியாகவும் மட்டுமல்ல, சுய மரியாதையுடனும் சுதந்திரத்துடனும் வாழும் சூழ்நிலை ஏற்படவேண்டும். அது நிரந்தரமானதாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை இந்துமாமன்றம் விடுத்துள்ள புத்தாண்டுச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் தலைவர் வி.கைலாயப்பிள்ளை,பொதுச்செயலாளர் கந் தையா நீலகண்டன் ஆகியோர் கூட்டாக விடுத்த புத்தாண்டுச்செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

கடந்த மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவித்துவந்த எங்கள் சகோதர சகோதரிகளுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக பல வித நிவாரண உதவிகளை வழங்கி வந்திருப்பதுடன், அவர்களுக்காக தயங் காது குரல் கொடுத்தும் வந்திருக்கிறோம். கடந்த சில மாதங்களாக எங்கள் மக்கள் பாரிய இடப் பெயர்வுகளுக்கும், பெரும் இன்னல்களுக்கும் ஆளாகியபோது பல்வேறு வழிகளில் அவர்களுக்கு உதவியிருக்கிறோம். இடப்பெயர்வுக்குள்ளாகி வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்துவிட்டு வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகம் திரும்பிய பட்டதாரி மாண வர்களுக்கு வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக மாமன்றத்தின் சார்பாக நிதியுதவி செய்து வந்ததையும், இதற்கு லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையும் மனிதநேய நிதியமும் பங்களிப்பு அளித்தமையையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியறிதலுடன் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். கடந்த காலங்க்ளில் பாதிக்கப்பட்ட சகோதர சகோதரிகளுக்கு மாமன்றம் வழங்கி வரும் மனிதநேய, சமூகநல சேவைகளுக்கு பல வழிகளிலும் உதவிவரும் இந்துப் பெருமக்கள் தொடர்ந்தும் அதே ஆதரவையும் ஒத்துழைப்பையும் மாமன்றத்திற்கு தர வேண்டும் என வேண்டுகிறோம். அதே சமயம் அவர்கள் யாவருக்கும் மாமன்றத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்து அவர்களுக்கு எல்லாம் திருவருளை வேண்டிப் பிரர்த்திக்கின்றோம்.

'எங்கள் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் துயரங்கள் மிக விரைவில் முற்றுமுழுதாக நீங்கி, ஒளிமயமானதொரு எதிர்காலம் அவர்களுக்கு இப்புத்தாண்டில் உதயமாகவேண்டும் என அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**அகில இலங்கை இந்துமா மன்றம்.**



# வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய

# இரதோற்சவ சிறப்பு மலர் - 14.04.2010



## உற்சவ குருவின் ஆசியுரை

அவனருளாலே அவன்தாள் வணங்கி காரை நகர் வாரிவளவு புண்ணிய சேத்திரத்திலே அடியவர்கள் வேண்டுவனவற்றை வாரி வழங்கி வரும் கற்பக கணபதியை வணங்கி தமிழர்களின் புத்



தாண்டு தினமாகிய சித்திரை வருடப்பிறப் பன்று தேர் உற்சவத்தை வாரி வளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் காண்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டும். அவ்வளவு பக்தி பூர்வமாகவும் அமைதியாகவும் நடைபெறும் இரதோற்சவத்தை காணுகின்ற அடியவர்கள் அனைவரும் குறிப்பாக மாணவர்கள், மனதாடன பரீட்சைகளில் அதி சிறப்பான பெறுபேற்றை பெறவும் கண்ணிகைகள் உசித காலத்தில் திருமாங்கல்ய பேற்றைப் பெற்று பதினாறு செல்வங்களுடன் வாழவும் சுமங்கலிகள் தீர்க்கசுமங்கலிகளாக வாழவும் விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெற்று நன்மை அடையவும் உத்தியோகத்தர்கள் அவர்களது துறையிலே மேலும் உயர் பதவிகளை பெறவும் வியாபாரிகள் தங்களது வியாபாரத்திலே பல கோடிகளை இலாபகரமாக ஈட்டவும் கலைத்துறையிலே ஈடுபடுபவர்கள் அவர்களது புகழ் ஓங்கி வளரவும் மேலும் கற்பக விநாயக பக்த அடியார்கள் சகல செல்வங்களையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழவும் ஆலய தர்மகர்த்தாக்கள் ஆலயத்தைச் சிறப்பாக நடாத்தவும் அரசியல்வாதிகள் சிறப்பாக நாட்டை ஆண்டு இத் திரு நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டு செல்லவும் கற்பக விநாயகரை இறைஞ்சி வேண்டி இன்று நடைபெறும் தேர்த் திருவிழாவிலே மிகவும் முக்கியமான பணியான கற்பக கணபதியின் தேர்வடத்தை பற்றி இழுத்து எமது இந்த பிறவியிலே நாம் எல்லோரும் செய்த பாவங்களை அறுக்க விக்கினம் தீர்க்கும் கணபதியை வேண்டி கற்பகத்தானின் சகல அடியவர்களும் சீரும் சிறப்புமாக வாழ வேண்டி ஆசி கூறி அமைகின்றேன்.

*சுபமஸ்து*

*லோகா சமஸ்தா சுகினோபவந்து*

**சிவஸ்ரீ முத்து பாலகுமாரசுவாமி குருக்கள்**
**நயினை நாகபூஷணி அம்மன் கோவில்**
வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் உத்தரகோவை.



## எங்கள் நாயகனுக்கு இரதோற்சவம்

காரைநகர் வாரிவளவில் இன்று எங்கள் நாயகனிற்கு இரதோற் சவம் நடைபெறுகின்றது. இதனைக் காணக் கண் ஆயிரம் வேண்டும்.

அறிவுத் தெய்வமாகிய விநாயகப் பெருமானை மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும உள்ளன்போடு வழிபட்டால் தமக்கு சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வு கிடைப்பதுடன் ஞானமும் முத்தியும் கிடைத்துவிடும். கன்மவினையின் காரணமாக நாம் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்தையும் வேறோடு அறுப்பதற்கும் பிரபஞ்சப்பற்றுக்களை நீக்கி இறைவன் திருவடியைப் பற்றுவதற்கும் விநாயகப்பெருமானின் அருள் வேண்டும்.

நைமித்திய கிரியைகளில் மகோற்சவம் சிறப்பிடம் பெறுகின்றது. நித்திய கிரியைகளில் ஏற்படும் குறைபாடுகளை நீக்குவதற்காகவே நைமித்திய கிரியைகள் நடைபெறுகின்றன. மகோற்சவ திருவிழாக்களில் தேர் உற்சவம் மிகவும் சிறப்பானதாகும். இவ்வாறு சிறப்பான தேரேறி வரும் கற்பக விநாயகனைத் தினமும் பார்க்கப் பார்க்க எப்போதும் கடவுளாய்த் தெரிவதில்லை. எமக்கு அவர் நண்பன், தோழன், நல்லாசான் எல்லாவற்றுக்கும் அப்பால் எங்கிருந்தாலும் எங்கள் உயிர் காத்தவன். இப்படியான நாயகன் வருடந்தோறும் வருடப்பிறப்பன்றே தேரேறி வந்து எமது வினைகளைத் களைந்து அருளாட்சி செய்கிறார்.

ஆகவே ஊர் கூடி ஒன்றிணைந்து தேரேறி வரும் விநாயகனின் வடம் பிடித்து திருவருள் பெற்றுய்ய வேண்டுவதோடு அனைவருக்கும் அருட்காட்சம் கிடைக்க கற்பகத்தானை வணங்குகின்றேன்.

**பிரதேச செயலர், காரைநகர்.**

## ஆதீன கர்த்தாவின் உள்ளத்திலிருந்து

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று இரதோற்சவத்தினை காண்பதனையிட்டு உள்ளம் உவகையடைகின்றது.

எமது மூதாதையர் கட்டிக் காத்து உருவாக்கிய ஆலயம் இன்று புதுப்பொலிவுடன் மிளிருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.



இற்றைக்கு சுமார் இருபத்தேழு வருடங்களின் பின்னர் இந்த ஆலயத்தின் காட்சியினையும் எம்பெருமானின் இரதோற்சவ நிகழ்வுகளையும் நேரடியாக காணும் பாக்கியம் பெற்றுள்ளேன்.

இவ் ஆலய வளர்ச்சிக்கு உதவிய அனைத்து அடியார்களிற்கும் நன்றி கூறும் இவ்வேளையில் அவர்களிற்கு கற்பக விநாயகர் அருட்கடாட்சம் கிடைக்க வணங்கி பணிகின்றேன்.

எமது ஆலய சூழலில் வசித்தவர்கள் எல்லோ ரும் பண்பானவர்கள், கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் இறைபணியாற்றுபவர்கள். இதற்கு கற்பக விநாயகரின் திருவருளே காரணமாகும்.

ஆகவே எல்லோரும் கற்பக விநாயகனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து சமூக முன்னேற்றத்திற்கு எம்மால் ஆன பங்களிப்பினைச் செய்து இறை பணியாற்றி இன்பமாக வாழ மீண்டும் கற்பகவி நாயகனை பணிந்து வணங்குகின்றேன்.

**க.பாலச்சந்திரன்**
**ஆலய ஆதீன கர்த்தா,**
**கற்பகவிநாயகர் ஆலயம்,**
**வாரிவளவு, காரைநகர்.**

**மலர் அமைப்பு:- ஐங்கரன்**

சீமாட்டி புடவைக்கடல்
கிளை:- மங்கை சில்க்ஸ்
இல:15, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

சிங்கப்பூர் ஜுவல்லறி
இல:93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 4590260

கணேசன் ஸ்ரோர்ஸ்
201, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்

எஸ்.பி.என்.மோட்டோர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 2833

கஜமுகன்
ஹாட்வெயார்ஸ்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

TCN EXPRESS INTERNATIONAL
வாடிக்கையாளர் அனைவருக்கும் வாரிவளவு கற்பக விநாயகரின் அருள் வேண்டுகிறோம்.
உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை
(சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
திருமுருகன் கொம் நெற்
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்
(வி-004)

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010




அன்பார்ந்த
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய 'விகிர்தி' புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

பிறக்கும் புத்தாண்டில் நாட்டில் சாந்தி சமாதானம் மலர்ந்து அனைவரும் இன்பமாக வாழ வாழ்த்துகின்றோம்

## யாழ். நகரில் புதிய பொலிவுடன்

# E.S.P.N & Co.

- யப்பானிய தொழில்நுட்பத்துடன் புத்தம் புதிய லுமாலா ஆண், பெண் ஸ்போட்ஸ்,யுனியர் துவிச்சக்கர வண்டிகளும், அதன் உதிரிப்பாகங்களும்.
- இந்தியாவில் உற்பத்தியாகி உலகத் தரக்கட்டுப்பாட்டின் ISO 9001 சான்றிதழ் பெற்ற புத்தம் புதிய கீரோ ஆண்,பெண் ஸ்போட்ஸ்,யுனியர் மிதிவண்டிகளும் உதிரிப்பாகங்களும்.
- வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மௌவுன்டின்,சொப்பர் மிதிவண்டிகளும், பேபி வோக்கர், பேபி பிறேம், பேபி கார் வகைகளும்.
- பல்வகையான தொலைக் காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், சீடி, டெக் வகைகள், கசற் ரேடியோ வகைகள், டிஸ் அன்ரனா வகைகள், ஓடியோ, வீடியோ கசற்றுகள் சீடி வகைகள், பிலிம்ரோல் வகைகள்,மணிக்கூட்டு வகைகள், மிக்சி வகைகள், றைஸ் குக்கர், ஒவன் வகைகள், சாஜ்ஸர் லைற் வகைகள், மின் கேத்தில் வகைகளும்.
- பினிக்ஸ் பிளாஸ்டிக் வீட்டுப் பாவனைப் பொருட்கள் தளபாட வகைகளும்
- மோட்டார் வாகன ரயர்,ரீயூப் வகைகளும் மற்றும் தலைக் கவசங்கள்.

இவை அனைத்துப் பொருட்களையும் ஒரே நவீனமயப்படுத்தப்பட்ட
காட்சி அறைகளில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

## இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்

52,54, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.

Tel: 021 222 3096 Fax: 021 222 4394

E-Mail:espn.if@ hotmail.com

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்



**அசோகா நகை அகம்**

**ASOKA JEWELERS**

நம்பிக்கை நாணயம்- உத்தரவாதம்
-22 கரட் தங்க நகைகளுக்கு



இல: 111 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 6290



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

சகல பாமசி & குறோசறீஸ் பொருட்களையும்
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள

**றூபா பன்முக வர்த்தகம்**

இல.104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.:021 222 2479



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



**கிருஷ்ணா நகை மாளிகை**

குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.



**கிளை: கிருஷ்ணா அடகுக்கடை**
இல. 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5046



அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

**ராம்கோ சீமெந்து**




RAMCO

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்

**ஐஸ்வர பகவான் அன் கம்பனி**

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொ. பே: 021 222 2122, 021 222 2350



இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

உடல் வளர்ச்சிக்கு

**ஜீவாகாரம்**

உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்த சத்துணவு. இரசாயனக் கலவை அற்றது




உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம்
என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

**அன்னா தயாரிப்புகளே!**

- அன்னா கோப்பி
- அன்னா அரிசி மா
- குரக்கன் மா
- ஆட்டா மா
- அன்னா மிளகாய்த் தூள் வகைகள்
- அன்னா பத்தி வகைகள்
- அன்னா பற்பொடி
- அன்னா இனிப்பு வகைகள்

**அன்னா தொழிலகம்**

**இணுவில்**

தொலைபேசி இல: 021 222 3565

# புதிய நாடாளுமன்ற உறுப்பினர்க்கு விசேட பயிற்சி அளிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இவர்களுக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து விசேட விளக்கம் அளிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையில் இந்த நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இந்த விசேட செயலமர்வு நடைபெறவுள்ளது என்றும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அடையாள அட்டையுடன் குறித்த செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் அறிவித்துள்ளது.

மேலும் எதிர்வரும் 22 ஆம் திகதி முதலாவது நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்படும் போது நாவலப்பிட்டி மற்றும் கும்புறுபிட்டிய பிரதேசங்களிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு பூர்த்தி செய்யப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (2-4)

# தமிழக அரசின் புதிய அறிவிப்பானது இலங்கைக்கு சாதகமாய் அமைந்துள்ளது

## இந்திய மீனவர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் வரையறுக்கப்பட்ட கடல் எல்லையை கடந்து சென்று மீன் பிடிப்பதில் பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் அதற்கான பாதிப்புகளுக்கு உதவிகள் வழங்கப்படமாட்டாது என்றும் மீறி செல்பவர்கள் உயிருக்கும் உத்தரவாதம் வழங்கப்படமாட்டாது என்றும் தமிழக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லை கடந்து செல்வதால் தான் பிரச்சினைகள் ஏற்படுகிறது என்றும் அதை தடுக்கவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகவும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தமிழக அரசின் இந்த புதிய அறிவிப்புக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள மீனவர் சங்க கூட்டமைப்புகள் இலங்கைக்கு சாதகமாகவே தமிழக அரசு இந்த அறிவிப்பை வெளியிடப்பட்டுள்ளதாக குற்றஞ் சாட்டியுள்ளனர். (2-4)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் 18 வயது இளைஞர் உயிரிழப்பு

## அக்கரைப்பற்றில் சம்பவம்

(கொழும்பு)

அக்கரைப்பற்று பிரதான வீதியில் நடந்த வாகன விபத்தில் படுகாயமடைந்த பதியுதீன் இஸ்மத் (18 வயது) என்ற இளைஞன் படுகாயமடைந்து கண்டி பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த சனிக்கிழமை மாலை 5 மணியளவில் உயிர் இழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2.15 மணியளவில் அக்கரைப்பற்று மணிக்கூட்டு கோபுரம் அருகில் உள்ள தனது கடை ஒன்றிலிருந்து பிரதான வீதியில் பிஸ்கால் சந்தியை நோக்கி மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இளைஞன் வீதியின் நடுவில் உள்ள சீமெந்து கட்டில் மோதியதில் தூக்கி வீசப்பட்டார்.

தலையில் ஏற்பட்ட பலத்த காயத்துடன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக கண்டி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு 40 நாட்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிர் இழந்துள்ளார்.

அக்கரைப்பற்று 6 ஆம் குறிச்சியைச் சேர்ந்த குறித்த இளைஞனின் ஜனாஸா நல்லடக்கம் அக்கரைப்பற்று முஸ்லிம் மையவாடியில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. (2-4)

# 100க்கு மேற்பட்ட இலங்கை கடற்படையினருக்கு இந்திய போர்க் கப்பலில் பயிற்சி ஆரம்பம்

(கொழும்பு)

திருமலைத்துறை முகத்திற்கு வருகை தந்துள்ள மஹார் என்ற இந்திய போர்க்கப்பல் இலங்கை கடற்படையினருக்கு தீவிர பயிற்சிகளை வழங்கி வருவதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய கடற்படையின் ஈருடக தரையிறங்கு கலம் கடந்த ஞாயிறு திருமலை துறை முகத்தை வந்தடைந்துள்ளது. ஆறுநாள் பயணமாக இங்கு வந்துள்ள இந்த கப்பல் இலங்கை கடற்படையினருக்கு பல்வேறு சிறப்பு பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

இலங்கை கடற்படையின் பாரம்பரிய விழாவுடன் வரவேற்கப்பட்ட இந்தக் கப்பலில் நூற்றுக்கு மேற்பட்ட இலங்கை கடற்படையினரும் அதிகாரிகளும் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

கடல்வழிகளை கண்டறிதல், தொலைத் தொடர்பு பயிற்சிகள், கடற்தாக்குதல், கடற்படையினருக்கான சிறப்பு கற்கை நெறிகள், அனர்த்த நிவாரணம் போன்ற விடயங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்திய கடற்படை கப்பலின் கப்டன் சைமன் மத்தியாயை இலங்கை கடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் ஜயந்தா கொலம்பகே வரவேற்றிருந்தார்.

125 மீற்றர் நீளமும், 5,700 தொன் எடையும் கொண்ட இந்த கப்பலில் 20 அதிகாரிகளும் 235 கடற்படையினரும் பணியாற்றி வருவதாக அவை மேலும் தெரிவித்துள்ளன. (2-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கொய்யா

Botanical Name- Psidium guajava
Family - Myrtaceae
Sinh - Pera
Engl - Guava tree

இளம் கிளைகளில் மென் தூவியுடைய சிறியமரம் ; புதர்ச்செடி ; இலைகள் நீளமானவை ; தடிப்பானவை ; 10-16 செ.மீ நீளம் கொண்டவை ; அடிப்புறம் மென் தூவியுடையவை ; 1-3 வெள்ளை நிறமுடைய மலர்கள் மணமுடையவை. கனிகள் கோளவடிவின ; வெளியே மஞ்சள் அல்லது பச்சை நிறமுடையவை. உள்ளே வெள்ளை அல்லது செந்நிறமுடையவை.

### பரம்பலும் இனவிருத்தியும்

விண் பதியண்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. நட்ட இரண்டு அல்லது 3 ஆண்டுகளில் காய்ப்பிற்கு வரும். ஏறக்குறைய 25 ஆண்டுகள் இது பலன் தரும்.

### 100 கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்

ஈரலிப்பு (கி) - 81.7, புரதம் (கி) - 0.9, கொழுப்பு (கி) - 0.3, காபோவைதரேற்று (கி) - 11.2, கல்சியம் (மி.கி) - 10, பொஸ்பரஸ் (மி.கி) - 28, இரும்பு (மி.கி) - 1.4, தயமின் (மைக்ரோகிராம்) - 30, ரைபோபிளேவின் (மைக்ரோகிராம்) - 30, நியாசின் (மி.கி) - 0.4, விற்றமின் சி (மி.கி) - 212.

### மருத்துவப் பயன்கள்

கொய்யாப்பழம், இலை, பூ, வேர், பட்டை முதலியவை மருத்துவக் குணமுடையவை. கொய்யாப் பழத்திற்கு "வெப்ப நாடுகளின் அப்பிள்" என்றும் பெயர் உண்டு.

- கொய்யா பழத்தைச் சாப்பிட மலம் இளகும். விந்து விருத்தியடையும். இதய ஓட்டம் சீர்பட உதவும். பற்களுக்கு உறுதியும், உடலிற்கு குளிர்ச்சியும் ஏற்படும். ஆனால் அளவிற்கு அதிகமாக சாப்பிட்டால் பசிமந்தம் ஏற்படும்.
- பட்டை 40 கிராம் அளவு எடுத்து 4 மடங்கு நீர்விட்டு 1/4 ஆக வற்றக்காய்ச்சி 30 மில்லி அளவு காலையில் கொடுக்க வயிற்றுப் போக்கு குணப்படும். புண்களைக் கழுவவும் இக்குடிநீரை பயன்படுத்தலாம். அதாவது பக்றீரிய அழுகலை தடுக்கும்.
- இலையைமென்று குதப்பி பற்களை தேய்த்துவர பல்வலி நீங்கும். வாய்ப்புண் நீங்கும். இதன் இலைகளில் 2 கைப்பிடியளவு எடுத்து 4 மடங்கு நீர்விட்டு 1/4 ஆக வற்ற வைத்து 30 மில்லி அளவு காலையிலும்,



மாலையிலும் அருந்த வாந்தி, வயிற்றுப் போக்கு ஆகியவற்றை ஓரளவு தடுக்கும்.
- தளிர் இலைச்சாற்றில் 10 மில்லி அளவு வெந்நீரில் கலந்து கொடுக்க சுரவெட்கை தணியும்.
- கொய்யா வேரை (40 கிராம்) கழுவி நசுக்கி 200 மில்லி தண்ணீரில் ஊறவைத்து வடித்து 5-10 மில்லி அளவு காலை வேளையில் குழந்தைகட்கு கொடுக்க மலம் இளகி வெளியேறும்.
- பட்டைக் குடிநீரால் புண்களைக் கழுவலாம்.
- **பசிமந்தப்பட்டால்**, கொய்யாக் கொழுந்து இலைகளில் 3 இனை அம்மியில் வைத்து அத்துடன் 1/2 தேக்கரண்டியளவு சீரகம், சிறிது உப்பு இவைகளை வைத்து மைபோல அரைத்து உருட்டி வாயில் போட்டு சிறிதளவு வெந்நீரில் குடிக்க நல்ல பசியுண்டாகும்.
- **கொய்யாப்பழ ஜாம் :** நன்கு பழுத்த 6 கொய்யாப்பழங்களைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்க வேண்டும். ஒரு வாணலியை அடுப்பில் வைத்து அதில் 1/2 கிலோ சீனி சேர்த்து சிறிது தண்ணீர்விட்டு காய்ச்ச வேண்டும். அது பாகுபோல் ஆகிவிடும் நிலையில் நறுக்கி வைத்திருக்கும் பழத்துண்டுகளை அதில் போட்டு நன்றாகக் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். பழம் வெந்துவரும் போது கால் லீற்றர் தூய்மையான தேனை விட்டு 5 ஏலக்காய் போட்டு கிளறி இறக்கி வைக்க வேண்டும்.
- பின்பு இளஞ்சூட்டில் மத்தைக் கொண்டு நன்கு கடைந்து தூய்மையான சீசாலில் போட்டு நன்கு மூடித் தேவையான போது எடுத்து இட்லி, தோசை போன்றவற்றோடு சேர்த்து உண்ணலாம். இந்த ஜாம் 15 நாள்வரை கெடாதிருக்கும். உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுப்பதுடன், உடலிற்கு பலத்தையும் கொடுக்கும்.
- **கொய்யாப்பழ கீர்**

தேவையான கொய்யாப்பழம் - 10, பசுவின் பால் - 1/2 லீற்றர், முந்திரி பருப்பு - 100 கிராம், காய்ந்த திராட்சை - 100 கிராம், பேரீச்சம்பழம் - 100 கிராம், ஏலக்காய் - 7, சீனி - 1/2 கிலோ, குங்குமப்பூ - 20 மி.கி, பசுநெய் - 25 கிராம்.

பாலை ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி காய்ச்சவும். கொய்யாப்பழங்களை முழுசாக கழுவி மிக்ஸியில் அடித்து வைக்கவும். காய்ச்சிய பாலில் 1 டம்ளர் சூடு இல்லாமல் ஊற்றி, கொய்யாப்பழத்தை மிக்ஸியில் அடிக்கவும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

மீதமுள்ள பாலை சூடு ஆறியதும், கொய்யாப்பழக் கலவையில் ஊற்றவும். பேரீச்சைகளை கொட்டைகளை நீக்கி இரண்டாக வறுத்து போடவும். முந்திரி, திராட்சைகளை நெய்யில் வறுத்து போடவும். ஏலக்காயை பொடிசெய்து போடவும். மீதமுள்ள நெய்யை ஊற்றவும். குங்குமப் பூவை போடவும். எல்லாப் பொருட்களையும் போட்டு நன்கு கலந்து சிறு; சிறு கப்களில் ஊற்றி சாப்பிடலாம்.

- **இதன் பயன்** - விற்றமின் சத்துக்களும், என்புகள் உறுதியாகவும், பற்கள் பலம்பெறவும், உடலில் ஏற்படும் காயம், புண் இவைகள் ஆறவும், இரத்த சோகை உண்டாகாமல் இருக்கவும் பயன்படுகிறது.

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010


இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

Multilac

www.multilac.com

வர்ண உலகில் புரட்சி



உயர்தரச் சான்றிதழ்களுக்கு இப்போது அதிகம் செலவு செய்யாதீர்கள்.

கந்தவேலன் வர்ணவங்கி

KANTHAVELAN COLOUR BANK

110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

WE COLOUR THE WORLD

தொ. பே: 021 2222822


## உன் வரவு நல்வரவாய் விளங்கட்டும்!

நன்னிலையாம் சகவாழ்வுச் சூழலிலே நானிலத் தோர்
எந்நாளும் வாழ்ந்திடவே ஏற்றதாம் வழியினிலே
முன்னோக்கிச் செல்கின்ற மாற்றமதைத் தந்திடவே
உன்வரவு நல்வரவாய் விளங்கட்டும் 'விகிர்தி'யே!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்


ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்



திருமணப் பட்டுப் புடவைகளுக்கும்
நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும்
சிறுவர், சிறுமியர்களுக்கான சிறந்த றெடிமேற் ஆடைகளுக்கும்.

ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொ. பே: 021 222 5679

சொகுசுவான்
மீண்டும் பாதுகாப்பான பயணத்துக்கு
யாழ்-கொழும்பு-யாழ், யாழ்-வவுனியா-யாழ்.

யோகாஸ் கொமினிக் கேசன்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை தொ.பே: 021 321 5270

HOLCIM CEMENT

அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்



Jaffna District Batas
யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

SRI RANGAN ENTERPRISES
370, Hospital Road, Jaffna.

ஸ்ரீ ரங்கன் என்ரர்பிரைஸ்
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2027

Selva Hardware
120, Stanley Road, Jaffna.

செல்வா காட்வெயர்
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2873

DELMEGE- மில்க்றோ, பேக்கிங் பவுடர், ஜாம், ஐசிங் சுகர், ரின்மீன், TVP சோயாமீற், ஜலற்றீன், புடிங், நூடில்ஸ், கஸ்ரட் பவுடர், கரமல், வட்டிலப்பம், கொக்கோபவுடர் அனைத்தையும் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

Lanka Milk Food

Dairy Farm
My Juice
Farleys Rusk 150g
Casilian 250g
Corn Flakes
Farleys Rusk 60g
Casilian 120g
Happy Cow Cheese

# 2010 புத்தாண்டு பலன்கள்

## மேடம்

தொட்ட காரியங்கள் வெற்றி பெறும்!

மற்றவர்கள் உங்களை தூக்கிப் பேசினாலும் தாக்கிப் பேசினாலும் ஒரே மனநிலையைப் பெற்றிருக்கும் மேட ராசி நேயர்களே!

வந்து விட்டது புத்தாண்டு! வளமான வாழ்க்கை உங்களுக்கு அமையப் போகிறது. உங்களுக்கு இனி பணக் கவலையும் இல்லை ; மனக் கவலையும் இல்லை. உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால் தைரியமும் தன்னம்பிக்கையும் தான் உங்களுக்கு கைகொடுத்து உதவுகிறது.

துணிவு ஒரு புறமும் பணிவு ஒருபுறமும் உங்களுக்கு பக்க பலமாக இருப்பதால் எந்தக் காரியமும் எளிதில் நடைபெற்று விடுகிறது. உங்களுக்குத் தனாதிபதியாக சுக்ரன் விளங்குவதால் அள்ளிக் கொடுக்கும் சுக்ரன் அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருப்பார். பணப்புழக்கம் குறைவாக இருக்கும் பொழுது வழிபாடுகள் உங்களுக்கு கைகொடுத்து உதவும். எனவே மனக்குழப்பம் வேண்டாம்.

ஜுலை 21 முதல் செப்டம்பர் 6 வரை மனதில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டிய நாட்களாகும். அப்பொழுது தான் சனியும் செவ்வாயும் கன்னி ராசியில் இணைகிறார்கள். மிகுந்த கவனம் தேவைப்படும் நேரம் அது. கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அந்த நேரத்தில் தெய்வங்களைக்கும்பிட்டுக் காரியங்களைத் தொடங்கினால் வாடும் சூழ்நிலை மாறி வளரும் சூழ்நிலை உருவா கும்.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும் புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இணைந்து செயல்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல் பணிந்து வணங்கி பரிகாரங்கள் செய்து யோகபலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்கும் சென்று வந்தால் தேக நலனும் சிறப்பாக இருக்கும். செல்வ வளமும் பெருகும்.

பெயரியல் முறையில் எண்கணித அடிப்படையில் சுக்ரன் சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்சநிலை பார்த்து அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால் எதிர் காலம் இனிமையாக இருக்கும். குருவிற்குரிய ஆண்டாகக் கருதப்படும் இந்த 2010 இல் குருவின் பார்வை உங்கள் இராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் பதிகிறதோ அந்தந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற் றங்கள் வந்து சேரும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

1-1-2010 முதல் 30-40-2010 வரை

இக்காலம் உங்களுக்கு எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டிய காலமாகும். இராசி நாதன் செவ்வாய் நீச்சம் பெறுகிறார். எனவே ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். மருத்துவச் செலவுகள் கூடும். மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து கொண்டேயிருக்கும்.

உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள வேண்டுமானால் நீங்கள் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சொத்துப் பிரச்சினைகளை சுமூகமாக முடித்துக் கொள்வது நல்லது. சொந்தங்களை அரவணைத்துச் சென்றால், வந்த வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். குடும்பச் செலவுகள் கூடும் .

இக்காலத்தில் சனியும் வக்ர கதியில் இயங்குவது அவ்வளவு நல்லதல்ல . 10,11க்கு அதிபதி வக்ரம் பெறுவதால் தொழிலில் மாற்றங்கள் உருவாகும். தொல்லை தரும் எதிரிகளின் எண்ணிக்கை அதிகரிக்காமல் இருக்க வேண்டுமானால் ,நல்ல சூழ்நிலைகள் அமைய வேண்டுமானால் தெள்ளத் தெளிவோடு தேர்ந்தெடுத்தக் கோவில்களுக்குச் சென்று வழிபட்டு வர வேண்டும் .வார வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும். மாத வழிபாடு மடமடவென்று காரியங்களை நிறைவேற்றி மகிழ்ச்சியை வரவழைத்துக்கொடுக்கும். சிறப்பு வழிபாடுகள் சிக்கல்கள் அனைத்தையும் தீர்த்து வைக்கும்.

1-5 2010 முதல் 31.08.2010 வரை

இக்காலம் இன்பங்களை அதிகம் சந்திக்கும் காலமாக அமையப் போகிறது. காரணம் விரயாதிபதி குருவும் வக்ரம் பெறுகிறார். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்குக்கிடைக்கும். பெட்டியில் பணம சேர பிரபலஸ்தர்கள் பின்னணியாக விளங்குவர். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். கடன் சுமை குறைந்து கவலைகள் தீர்ந்ததை உறவினர்களிடமும் ;நண்பர்களிடமும் எடுத்துரைப்பீர்கள்.

மே 5ஆம் திகதி முதல் மீன இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். போட்டி பந்தயங்களில் இலாபம் கிடைக்கும். விருப்பப்படும் போதெல்லாம் வெளிநாடு சென்று வந்து சம்பாத்தியத்தை பெருக்கிக் கொள்வீர்கள்.

மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பதியும் இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. உங்கள் இராசிக்கு 4,6,8 ஆகிய இடங்களை குரு பார்க்கப் போவதால் அந்த இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் எல்லாம் துரிதமாக நடைபெறப் போகின்றன. குறிப்பாக வீடு வாங்க வேண்டும், இடம் வாங்க வேண்டும் என்று கனவு கண்டவர்கள் கனவு நனவாகி மகிழ்ச்சி வெள்ளத்தில் கரைபுரளப் போகிறார்கள்.

சொத்துக்களால் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். சொந்தங்களால் ஏற்பட்ட கலக்கம் தீரும். தாய்வழி ஆதரவு பெருகும். சகோதரர்களைச் சார்ந்திருந்த பெற்றோர்கள் இனி உங்களைச் சார்ந்திருப்பார். மருத்துவச் செலவு குறையும். ரண சிகிச்சை சாதாரண சிகிச்சையாகும். இதுவரை எதிரியாக இருந்த இனத்தார்களும் பங்காளிகளும் இப்பொ முது குணம் மாறுவர். பொது வாழ்வில் புகழ் கூடும்.

குருவின் பார்வை அஷ்டமத்தில் பதிவதால் சென்ற வருடத்தில் ஏற்பட்ட இழப்புக்களை இப்பொழுது ஈடுகட்டுவீர்கள். ஏமாற்றிய கூட்டாளிகள் சரணடைவர். தாமாகவே முன் வந்து தாங்கள் செய்த சிக்கல்களைச் சொல்லி தனலாபத்தை உங்களிடம் தருவர். குடும்பத்தில் உள்ள மனக்கசப்புகள் மாறும்.

1.9.2010 முதல் 31.12.2010 வரை

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். இருப்பினும் மற்ற கிரகங்கள் நல்ல நிலையில் உலா வருகின்றன. கன்னி இராசியில் உள்ள சனி வக்ர நிவர்த்தியாகி விட்டார். எனவே, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அன்றாடப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து ஆதரவுக் கரம் நீட்டுவோரின் எண்ணிக் கையை அதிகரிக்கச் செய்யும். மூடிக்கிடந்த உங்கள் தொழிலுக்கு திறப்பு விழா காண்பீர்கள். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

வருடக் கடைசியில் வசந்த காலம் உங்களுக்கு வந்து சேரப் போகிறது. அருளாலர்களின் சந்திப்பு கிட்டும். அஞ்சல் வழியிலும் அனுகூலமான செய்தி வந்து சேரும். வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களைப் பழுது பார்த்து செலவிடுவதைக் காட்டிலும் புதிய வாகனம் வாங்கினால் என்ன? என்ற சிந்தனை மேலோங்கும். முரண்டு பிடித்த மூத்த சகோதரர்கள் ஒத்து வருவர். குழந்தைகளின் கல்வி நலனுக்கும் கல்யாண முயற்சிக்கும் எதைச் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அதைச் செய்து வைப்பீர்கள்.

கேட்ட வரங்களை அள்ளிக் கொடுக்கும் விநாயகரை வழிபட்டு வாருங்கள். செவ்வாய், சனி சேர்க்கை காலத்தில் அங்காரக ஸ்தலத்திற்கு அவசியம் செல்வது நல்லது.

மேஷ ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத் தொடக்கத்திலேயே குடும்பச்சுமை கூடும். விலை உயர்ந்த பொருட்களைக் கையாளுவதில் கவனம் தேவை. மே மாதத்திற்கு மேல் குருவின் பார்வை பலத்தால் தாய்வழி ஆதரவு பெருகும். உடன் பிறப்புகளும் உங்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுப்பர். கணவன் செய்யும் தொழில் களில் உங்க ளைப் பங்குதாரர் ஆக்கிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. ஆகஸ்ட் மாதத்திற்கு மேல் நீங்கள் ஆசைப்பட்டதை அடைய நேரிடும். கும்ப குருவையும் சர்ப்ப கிரகத்தையும் கும்பிட்டு சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் உங்கள் நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும்.

சிவல்புரி சிங்காரம்

(தொடரும்)

# பலம் பொருந்திய கட்சியாக திகழ்ந்த ஐ.தே.க இன்று மிகவும் பலவீனமடைந்துள்ளது

## பேராசிரியர் விஸ்வவர்ணபால

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் நாம் எதிர்பார்த்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் எமக்கு கிடைக்காவிடினும் கூட அதற்கு கிட்டிய அளவிலான வாக்குகள் கிடைக்கப் பெற்றன.

சரித்திரம் காணாத மாபெரும் வெற்றி இலக்கை எம்மால் அடைந்து கொள்ள முடிந்தது. இந்த வெற்றியானது ஜனாதிபதியின் சாணக்கியமான அரசியல் சாதனைக்கு கிடைத்த மக்கள் ஆணையாகும் என்று முன்னாள் உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

பொருத்தமான பலமிக்க தலைமைத்துவம் இல்லாத காரணத்தால் இலங்கையின் தேர்தல் வரலாற்றில் தொடர்ச்சியாக ஐ.தே. கட்சி தோல்விகளை சந்தித்து வருகின்றது என்றும் அவர் கூறினார். பலம் பொருந்திய கட்சியாக திகழ்ந்த ஐ.தே.க. இன்று மிகவும் பலவீனமடைந்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இம் முறை பொதுத் தேர்தலிலும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கிய மக்கள் விடுதலை முன்னணியும் இன்று தனது தனித்துவத்தை இழந்து முக வரியற்று அநாதையைப் போன்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது.

தேர்தல் என்று வரும் போது அங்கே போட்டித் தன்மை இருக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய இரு தேசிய கட்சிகளும் இம் முறை வலுவிழந்து காணப்பட்டதனால் பொதுத் தேர்தலானது எமக்கு சவாலாகவும் போட்டி மிக்கதாகவும் தென்படவில்லை போட்டித் தன்மை இருக்கும் பட்சத்திலேயே அதில் விறுவிறுப்பு இருக்கும்.

1978 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அறிமுகப்படுத்திய அரசியலமைப்பின் பிரகாரம் ஒவ்வோர் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி பெற்று ஆட்சி பீடமேறியது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியால் இனி ஒரு போதுமே ஆட்சி பீடத்திற்கு வர முடியாதென பலராலும் கூறப்பட்ட கருத்தினை பொய் யாக்கி 1994 ஆம் ஆண்டு சந்திரிகாவை நாட்டின் தலைவராக ஆட்சி பீடமேற்றினோம்.

மீண்டும் 2002 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராகிய போதிலும் மிகவும் குறுகிய காலமே அவரால் ஆட்சியதிகாரத்தில் இருக்க முடிந்தது. அதற்குப் பிறகு இடம் பெற்ற அத்தனை தேர்தல்களிலும் நாமே வெற்றி பெற்றோம்.

நாட்டை ஆட்சி புரிபவர்கள் மத்தியதர மக்களை மட்டும் புரிபவர்கள் மத்திய தர மக்களை மட்டும் நோக்காமல் நாட்டில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் வாழும் அடிமட்ட மக்களது தேவைகள் குறித்தும் கரிசனை கொள்ள வேண்டும்.

இலங்கையை ஆசியாவிலேயே மிகவும் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றிய மைக்கும் ஜனாதிபதியின் எண்ணம் வெகுவிரைவில் கை கூடும். நாட்டு மக்கள் எமக்கு தரும் தொடர் ஆதரவு இதற்கு பக்க பலமாக அமையும் என்றார். (2-4)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயாவின் 96 ஆவது அகவை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் செ.மோகனதாஸ் சுவாமிகளும் நூல் வெளியீட்டுரையை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேலும் மதிப்பீட்டுரையை இளைப்பாறிய விரிவுரையாளர் ச. விநாயக மூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர். (2-4)

# இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டனர்

(சென்னை)

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் தாக்கினர்.

இதுபோன்ற சம்பங்கள் தொடர்வதால் மீனவர்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இராமேஸ்வரத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை ஏராளமான படகில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர்.

வழக்கம் போல் நடுக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் படகில் இருந்த மீனவர்களை விசாரணைகூட செய்யாமல் தாக்கினர். பின் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் பறித்துக் கொண்டு எச்சரித்து விரட்டியடித்துள்ளனர்.

இது போல் 20 க்கும் மேற்பட்ட படகுகளை நடுக்கடலில் வழிமறித்து இலங்கை கடற்படையினர் தாக்கியுள்ள்ளனர். இதில் மீனவர்கள் பலர் காயமடைந்தனர். கடற்படையினர் சென்றதும் அங்கிருந்து திரும் பிய மீனவர்கள் வரும் வழியில் மீன் பிடித்துக்கொண்டு திங்கள் அதிகாலை இராமேஸ்வரம் திரும்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010


மலரும் சித்திரைப் புத்தாண்டு மகிழ்ச்சிகரமாக
அமைய வாழ்த்துகின்றோம்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களைத்
தெரிவு செய்ய சிறந்த இடம்

## சோனியா ஜுவல்லறி
## SONIYA JEWELLERY

360/5, Main Street, Jaffna.

T.P. : 021 3008493,

360/5, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

## றூபி நகை மாளிகை

111/1 (227), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222828, 021 222 9038

புத்தாண்டு வாழ்த்துக்கள்

அழகுக்கு அழகு செய்யும் நவீன அழகிய
தங்க நகைகளுக்கு சிறந்த இடம்

## ஆசைப்பிள்ளை அன் சன்
## நகைமாடம்

தரம் நாடுவோர்
தவறாமல்
நாடுமிடம்

இல.10,
பஸ் நிலையம்,
சங்கானை.



ஓம் லட்சுமி நாராயணன் துணை





## இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

# ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரேடர்ஸ்

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உருளைக்கிழங்குகளின் ஏக விநியோகஸ்தர். சில்லறை மொத்த வியாபாரிகளுக்கு விசேட தள்ளுபடி வழங்கப்படும்.

ஆச்சி தயாரிப்பாளரும் யாழ், கிளிநொச்சி ஏக விநியோஸ்தரும்

உங்களின் உயர்ச்சியே,
எங்களின் மகிழ்ச்சி!

மளிகைப் பொருட்களையும் மொத்தமாக
பெற்றுக் கொள்ள முடியும்

- ஆச்சி மஞ்சள் தூள்
- ஆச்சி பலசரக்கு தூள்
- ஆச்சி மிளகாய் தூள்
- ஆச்சி வறுத்த பல சரக்குதூள்
- ஆச்சி உழுந்து மா
- ஆச்சி மாசி
- ஆச்சி துண்டு மிளகாய்
- ஆச்சி அப்பமா
- ஆச்சி சீரகம்
- ஆச்சி அரிசிமா
- ஆச்சி கடுகு
- ஆச்சி குரக்கன்மா
- ஆச்சி பெருஞ்சீரகம்
- ஆச்சி வெந்தயம்
- ஆச்சி கஸ்வரிசி
- ஆச்சி அப்பளம்

BOTTLED DRINKING WATER

யாழ். ஏக விநியோகத்தர்

## ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரேடர்ஸ்

இலக்கம் 589, 591, யாழ். கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: T.P.:077 3366482,0773776946, 021 2224579

# இப்புதிய வருடம் எமது மக்களுக்கு நிம்மதியின் அரவணைப்பாய் அமையும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



இலங்கைத்தீவின் அனைத்து மக்களும் அச்சமற்ற சூழலில் நிம்மதியுடனும் மன நிறைவுடனும் வாழத் தயாராகும் இச்சந்தர்ப்பத்தில் தமிழ், சிங்கள மக்களால் நிம்மதியாகக் கொண்டாடக் கூடிய சூழ்நிலையில் விகிர்தி புதுவருடப் பிறப்பு அமைந்துள்ளமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

கடந்தகால அசாதாரணச் சூழலில் எமது மக்கள் பல வருடங்களுக்கான பின்னடைவுகளுடன் புதுவருடங்களைப் பற்றி எண்ணிப் பார்க்கவே இயலாத வகையில் துன்ப, துயரங்கள் சூழ்ந்த இருண்ட யுகத்தினுள் வாழ்ந்து வந்துள்ள நிலையில் இவ்வருடம் எமது மக்கள் ஒளிமயமானதொரு எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதற்குத் தயராகி வருகின்ற நிலையில் விகிர்தி புதுவருடம் பிறக்கின்றது. இந்தப் புதுவருடம் அல்லலப்பட்டு வந்துள்ள எமது மக்களுக்கு நிம்மதியின் அரவணைப்பாக அமையும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

அதேநேரம் இதுவரையில் தங்களது சொந்த இருப்பிடங்களில் குடியமர்ந்திருக்கும் எமது உறவுகள் உடனடியாகக் குடியமர்த்தப்படுவதற்கும் சிறைகளிலும், புனர்வாழ்வு நிலையங்களிலும் உள்ள ஏனையவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவதற்கும் எமது மக்களின் அனைத்துத் தொழில் துறைகளும் சிறந்தோங்குவதற்கும் இந்த புதுவருடத்தில் நிச்சயம் வழிபிறக்கும். தங்களது உறவுகளைப் பிரிந்து துன்பமடைந்திருக்கும் அனைவரிதும் துன்பங்கள் கூடிய விரைவில் விலகி விடும். எம்மக்கள் அனைவருக்கும் ஒளிமயமான எதிர்காலத்திற்கான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கே.என். டக்ளஸ் தேவானந்தா**

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

# வடக்கு மாகாண ஆளுநரின் புத்தாண்டு வாழ்த்துச்செய்தி



விரோதி ஆண்டின் விரோதங்கள் நீங்கி மலரும் விகிர்தி ஆண்டில் வெற்றிகள் மிளிர நம்பிக்கையும் வெளிச்சமும் ஊட்டும் வளமுள்ள புத்தாண்டாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

அநேக வருடங்களுக்குப் பின்னர் அமைதி மிகு சூழலில் வடக்கு மாகாண மக்கள் புத்தாண்டைக் கொண்டாடுவதையிட்டு நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைய வேண்டும். கடந்த ஆண்டுகளைவிட இவ்வாண்டில் அநேகமாக எல்லா ஆலயங்களிலும் மக்கள் தமது அன்றாட வழிபாடுகளை செலுத்துவதனையும் பண்டைய கால பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் கொண்டாட்டங்களில் மன மகிழ்ச்சியுடன் ஈடுபடுவதனையும் காணக்கூடியதாக உள்ளது. அனைத்து மக்களும் தம் முன்னுள்ள சகல சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்தி வளமுடன் வாழ வேண்டும் என இப்புத்தாண்டில் வாழ்த்துகின்றேன்.

**ஜி.ஏ.சந்திரசிறி**

ஆளுநர், வடக்கு மாகாணம்.

## மனோகணேசனின்

# பாராளுமன்ற உறுப்புரிமையை தீர்மானிக்கவுள்ள நாவலப்பிட்டி மீள் தேர்தல் முடிவுகள்

(கொழும்பு)

நாவலப்பிட்டியில் நடைபெறவுள்ள மீள் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஜன நாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனின் பாராளுமன்ற பிரதிநித்துவம் நிர்ணயிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நாவலப்பிட்டி பிரதேசத்தில் 16 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் மக்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் கண்டி மாவட்ட தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தீர்மானிக்கப்படவுள்ளது.

இதற்கமையவே நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியில் அளிக்கப்படும் விருப்பு வாக்குகள் மனோ கணேசனின் பாராளுமன்ற உறுப்புரிமையை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக அமைந்துள்ளதென தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# தமிழ் தேசிய கூட்டமைப்பு சர்வகட்சியின் பிரதிநிதிகள் குழுவில் இணைத்துக்கொள்ளப்படும்

## குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகளில் இணைந்து கொள்ளுமாறு எதிர்காலத்தில் அழைப்பு விடுப்போம். அவர்களுடன் இணைந்து ஒரு இணைக்கப்பாட்டுக்கு வர முடியும் என்று நம்புகின்றோம் என சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியுள்ளது.

மக்கள் முழுமையான ஆதரவினை ஆளும் கட்சிக்கு வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் வடக்கில் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுடன் எதிர்காலத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுடன் இணைந்து கொள்ளுமாறு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுப்போம். அவர்களுடன் பேச்சு நடத்தி முக்கியமான இணக்கப்பாடுகளுக்கு வரமுடியும் என்று நம்புகின்றோம்.

மேலும் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளும் சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகளில் கலந்துகொள்ளும் என்றும் எதிர்பார்க்கின்றோம் என்றார். (2-4)

## அவுஸ்திரேலியாவிற்கான

# தமிழ் படகுப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும்-பாலிதகோஹண நம்பிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் படகுகளின் மூலம் அவுஸ்திரேலியாவிற்குச் செல்லும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும் என ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹண தெரிவித்துள்ளார்.

அகதிகளுக்கு அடைக்கலம் வழங்குவது தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் புதிய கொள்கைகள் வரவேற்கத்தக்கதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையினால் சட்டவிரோத குடியேற்றக்காரர்களின் நடவடிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் மேலும் சட்ட விரோதமான முறையில் புகலிடம் கோருவோர் வெறும் நாடொன்றை இலக்கு வைத்து படையெடுக்கக்கூடுமெனவும் அவர் எதிர்வு கூறியுள்ளார். (2-4)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான மோசடிகள்

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்று செல்பவர்களை பதிவு செய்து நிதி திரட்டும் மோசடி தொடர்பாக தகவல் கிடைத்துள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து பின்னர் பெருந்தொகை நஷ்ட ஈட்டை பெறமுடியும் என தெரிவித்து இந்த மோசடி இடம்பெறுவதாக பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்

இவ்வாறு பதிவு செய்வதற்கென நிதி அறவிடுவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை எனவும் இத்தகைய மோசடியில் ஈடுபடுவோர் குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு முறையிடுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

# அரசியலமைப்பு உருவாக்கல் சபையொன்று நியமிக்கப்பட வேண்டும்-வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)



தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறையில் பெறவேண்டிய உச்ச வெற்றியை பெற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் முதலில் அரசியலமைப்பு உருவாக்கல் சபையொன்றை நியமிக்க வேண்டும் என கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஜன நாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மருதானை வித்தியாலங்கார மாவத்தையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கும் போது,

புதிய அரசியலமைப்பு உருவாக்கல் சபையை அமைக்கும் முழுமையான உரிமை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு இருக்கின்றது. மக்கள் அதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளனர்.

நாட்டிற்கு ஒவ்வாத கொள்கைகளை மாற்றியமைத்து புதிய கொள்கைகளுடன் கூடிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காகவே மக்கள் அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்கியுள்ளனர்.

இவ்வாறுஉருவாக்கப்படும் புதிய அரசியலமைப்பின் ஊடாக் மக்களின் ஆணை செயற்பாட்டு ரீதியாக அரசாங்க நிர்வாகத்தை நடைமுறை ரீதியாக, அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

மேலும் நாட்டின் பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, காணி போன்ற துறைகளில் மக்களுக்கேற்ற வகையில் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

சர்வதேச நாடுகளுடன் இலங்கை ஏற்படுத்திக் கொண்டுள்ள நிபந்தனைகளை மாற்றியமைக்க வேண்டிய காலம் எழுந்துள்ளது என்றார் (2-4)

# என்னை கைது செய்ய முயன்றால் இரத்தஆறு ஓடும்

## கிர்கிஸ்தான் அதிபர் எச்சரிக்கை

ரஷ்யாவில் இருந்து பிரிந்த கிர்கிஸ்தானின் அதிபராக இருந்தவர் பாகியேவ். இவர் ஆட்சிக்காலத்தில் ஊழல் அதிகமானது. இவர் தனக்காக சொத்துக்களை வாங்கி குவித்தார். இதனால் கோபம் கொண்ட மக்களும் எதிர்க் கட்சியினரும் இவருக்கு எதிராக போராட்டத்தில் குதித்தனர்.

அப்போது நடந்த கலவரத்தில் கலவரக் காரர்கள் அதிபர் மாளிகைக்குள் நுழைந்தனர். இதனால் பயந்துபோன அதிபர் பாகியேவ் ஆட்சியை தூக்கிபோட்டு விட்டு உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பி ஓடினார். அவர் இப்போது டெய்யிட் என்ற இடத்தில் தலைமறைவாக இருக்கிறார்.

இதற்கிடையில் இடைக்கால ஆட்சி அமைக்கப்பட்டு உள்ளது. அந்த ஆட்சியாளர்கள் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதை அறிந்த பாகியேவ் என்னை கைது செய்தாலோ அல்லது கொலை செய்ய முயன்றாலோ இரத்த ஆறு ஓடும் என்று எச்சரிக்கை விடுத்து இருக்கிறார். (2-4)

நான்கு பேர் அமர்ந்து சீட்டாடுகிறோம். அவர வர்களுக்கு விழுகின்ற சீட்டு இருக்கிறதே அது விதி! விழுந்த சீட்டை எப்படி ஆடுகிறோம் என்பது தான் மதி! —டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பேசுபடு பொருளாகிவிட்ட ஏகப் பிரதிநிதித்துவக் கொள்கை

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஏகப் பிரதிநிதித்துவக் கொள்கை தமிழ்த் தரப்பிலிருந்து எழுந்த அரசியல் சொற்பதமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களை ஏகப் பிரதிநிதிகளாக அறிவித்தனர். இதனால் உள்ளக, வெளியக அரசியலில் விவாதத்திற்குரிய சொற்பதமாக 'ஏகப்பிரதிநிதித்துவம்' மாறியது.

தற்போது இருக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட அப்போது ஏகப்பிரதிநிதித்துவக் கொள்கையை மனதார ஏற்றுக் கொள்ளவில்லை. அதேசமயம் அதனை விமர்சிக்கும் நெஞ்சுரமும் அவர்களிடமும் இருக்கவில்லை.

ஆக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மட்டுமே ஏகப்பிரதிநிதித்துவக் கொள்கையை எதிர்த்தார்.

வீ.ஆனந்தசங்கரியின் எதிர்ப்பை தமக்கு சாதகமாக்கிக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்கள் இன்னும் பல சோடனைகளுடன் விடுதலைப்புலிகளிடம் போட்டுக் கொடுத்து ஆனந்தசங்கரியை கூட்டமைப்பில் இருந்து அடியோடு வெளியேற்றி தங்கள் நோக்கை அடைந்து கொண்டனர்.

எதுவாயினும் விடுதலைப்புலிகளின் அதி உச்சமான பலம் அவர்கள் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ள வைத்தது.

எனினும் துரதிர்ஷ்வசமாக அந்த அத்தியாயம் முற்றுப்பெறாத முடிபுகளாகிப் போக,

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏகப்பிரதிநிதித்துவக் கொள்கையை முன்வைக்கின்றது.

ஏகப்பிரதிநிதித்துவக் கொள்கையை முன்வைப்பதன் நோக்கம் என்ன? என்று ஆராய்ந்தால், எங்களோடு பேச்சு நடத்தித்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதாகப் பொருள் கொள்ளலாம்.

இதன் மறுபக்கத்தை புரட்டினால் இலங்கை அரசு தனிநாட்டை தருவதாக இருந்தால் கூட எங்களிடம்தான் பேசவேண்டும்.

நாங்கள் இல்லாமல் இனப்பிரச்சினை தீரக் கூடாது; தீர்க்கக்கூடாது.

இந்த வரட்டுத்தனம் எதற்காக? தொடர்ந்தும் பதவி ஆசைக்குத் தீனிபோடவா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றை நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

அதாவது இனப்பிரச்சினை என்பது இலங்கை அரசுகள் எதனையும் தருவதற்கு தயாராகாத நிலையில் நீண்டு செல்வதாகும்.

யார் ஏகப் பிரதிநிதிகளாக இருந்தாலும், முதலில் அரசு ஏதேனும் தீர்வுத் திட்டத்தை தருவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்.

ஆனால் அந்த நினைப்பு அரசிடம் அறவே இல்லை. இந்நிலையில் உங்கள் உறண்டல் கொள்கைகளை தூக்கி எறிந்து விட்டு உலக நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இருக்கக் கூடிய அனுதாப அலையை ஓயவிடாமல், அதனை சாதகமாக்கி எங்கள் பிரச்சினைக்கு தீர்வு காணுக்கள்.

இதற்காக நீங்கள் இந்தியாவை பிடித்தாலும் சரிதான்; சீனாவைப் பிடித்தாலும் சரிதான்.

புத்திசாலித்தனமாக காலத்தை கடத்தாமல் காரியத்தைச் செய்யுங்கள்.

உங்கள் ஏகப்பிரதிநிதித்துவக் கொள்கையை இனப்பிரச்சினைத்தீர்வுக்கு பின்னர் முன்வைத்து உங்கள் நோயைக் குணப்படுத்துங்கள்.

# வடக்கின் அபிவிருத்தி குறித்துப் பேச தமிழ்க் கூட்டமைப்பை அரசு அழைக்கும்

## முன்னாள் அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அரசாங்கம் தயாராக இருக்கின்றது. அதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதிர்காலத்தில் பேச்சு நடத்துவது தொடர்பான விடயம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

மகிந்த சமரசிங்க இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

வடக்கில் அதிகமான பிரதிநிதித்துவங்களை நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்றுக் கொண்டுள்ளது. எனவே வடக்கு மாகாணத்தில் எதிர் காலத்தில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் ஏனைய விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்த்து செயற்பட முடியாது.

அவர்களின் ஒத்துழைப்புடனேயே நாங்கள் எமது வேலைத் திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம். எனவே இவ் விவகாரங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அந்த விடயத்தில் அவர்களுடன் பேச்சு நடத்த அரசாங்கம் தயாராக இருக்கின்றது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யதார்த்த பூர்வமான நிலையில் செயற்பட வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது.

முழுமையாக நாட்டை துரித கதியில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றார். (ச-5)

## முதன்முறையாக இலங்கையில் இடம்பெற்ற ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் சகத்சமாதி தியானப் பயிற்சிப் பட்டறை

(கொழும்பு)

இலங்கையின் பல பாகங்களிலும் இந்தியாவைச் சேர்ந்த பிரம்மபூஜ்ஜிசிறி ரவிசங்கராஜி குருவின் சகத் சமாதி தியானப்பயிற்சிப் பட்டறை முதல் முறையாக நடைபெற்றது.



இத் தியானப் பயிற்சிப்பட்டறை மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த 4,5,6ஆம் திகதிகளில் நடைபெற்ற இப் பயிற்சிப் பட்டறையில் பதிவு செய்யப்பட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

முழுமையான இம் மூன்று நாள் தியானப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட பொதுமக்கள் ஆழமான தியானத்தைப் பெற்று மனமும் உடலும் அமைதியும் உற்சாகமும் பெற்றனர்.

மேற்படி ரவிசங்கராஜி குரு உலகில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குச் சென்று தியானப்பயிற்சியை இலவசமாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (2-4)

## வீதி விளக்குகள் இல்லாததால் வெலிங்டன் வீதியால் பயணிப்போர் சிரமம்

வெலிங்டன் வீதியில் வீதிவிளக்குகள் பொருத்தப்படாததால் அப்பகுதியூடாக இரவு நேரங்களின் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருவதுடன் பலர் அவ்வீதியூடான போக்குவரத்தை தவிர்த்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுமார் 15 வருடங்களின் பின்னர் வெலிங்டன் வீதி கடந்த வாரம் மக்கள் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டது. எனினும் அவ் வீதியில் இராணுவத்தினர் 24 மணி நேரமும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் வீதித் தடைகளும் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் அவ் வீதியூடாக பயணிப்போரின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. இதேவேளை இவ் வீதி விளக்குகள் அமைக்கப்படாததால் இரவுவேளைகளில் மக்கள் அவ் வீதியூடாகப் பயணிப்பதை தவிர்த்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். நகரை நவீன மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபையினால் வீதி விளக்குகள் சில இடங்களில் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கடற்றொழிலுக்குச் சென்ற சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலுக்குச் சென்ற சிறுவன் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளான். இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் மாதகல் கடற்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் சீந்திபந்தல் இளவாலையைச் சேர்ந்த இளவாலை சென்றீஸ் கல்லூரி மாணவன் ரி.சுபாஸ் (வயது 16) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருகையில் பாடசாலை விடுமுறை காரணமாக தந்தையுடன் கடற்றொழிலுக்குச் சென்ற சிறுவன் மாதகல் குஸ்மன்துறை கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை படகிலிருந்து தவறுதலாக கடலுக்குள் வீழ்ந்துள்ளான்.

சம்பவம் தொடர்பாக மாதகல் கடற்படையினருக்கு தெரிவித்த வேளை சம்பவ இடத்திற்கு சென்ற கடற்பகுதியினர் நீண்ட நேரத்திற்கு பின்னர் சடலமாக மீட்டனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணப் பொலிஸார் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (2-7-30)

## அவுஸ்திரேலியாவின் தீர்மானத்திற்கு எதிராக இலங்கை ஆப்கானிஸ்தானியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில்

அகதிகள் தொடர்பான அவுஸ்திரேலியாவில் புதிய தீர்மானத்திற்கு எதிராக இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானியர்கள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவுகளிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு தற்போது சிட்னி விலவூட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 50 பேர் இந்த உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தி வருவதாக அவுஸ்திரேலிய சமூக நீதிக்கான வலையமைப்பின் பிரதிநிதி ஜமால் தாவூத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவினால் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள சட்டங்களினால் புகலிட கோரிக்கைகள் தமாதப்படுத்தப்படுவதுடன் மீண்டும் நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கக் கூடிய அபாயம் நிலவுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்த சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருமாறு உண்ணாவிரதப் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை விலாவுட் முகாமில் 30 அகதிகள் அமைதியான முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருவதாகவும் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை எனவும் குடிவரவு திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (2-4)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### நமது தாய் நாடு

இந்தியா அழிந்து விடுமா? அது அப்படி அழிந்து விடுமானால் உலகிலிருந்து எல்லா ஞானமும் அழிந்து போய்விடும். சமயத்தின் மீது நமக்குள்ள இதய பூர்வமான இனிய அனுதாப உணர்ச்சிகள் எல்லாம் அழிந்து போய்விடும். எல்லா உயர்ந்த இலட்சியங்களும் மறைந்து போய் விடும். அவை இருந்த இடத்திலே காமமும் ஆடம்பரமும் ஆண் தெய்வமாகவும் பெண் தெய்வமாகவும் குடி கொண்டு ஆட்சி செய்யும்.

பணமே அங்குப் பூசாரியாக உட்கார்ந்து கொள்ளும். வஞ்சகம், பலாத்காரம், போட்டி ஆகியவற்றையே அது தன்னுடைய பூஜைக்கிரியை முறைகளாக வைத்துக்கொள்ளும். மனித ஆன்மாவையே அது பலி பீடத்தில் பலியாக்கும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி என்றுமே நடக்கப்போவதில்லை.

# சித்திரை புத்தாண்டு சிறப்புமலர்-14.04.2010






## அஸ்வின் சுழல் ஜாலம்; ரெய்னா,விஜய் அதிரடி

# சென்னை அணி அசத்தல் வெற்றி; கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பாவம்

(சென்னை)

ரெய்னா–விஜயின் அதிரடி இணைப்பாட்டத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 9 விக்கெட்டுக்களால் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று சென்னையில் நடைபெற்ற லீக் சுற்றின் 48ஆவது போட்டியில் தோனிதலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, அஸ்வின், பொல்லிங்கரின் பந்துவீச்சில் சிக்கி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 139 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் 48 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 48 ஓட்டங்களையும் திவாரி 31 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக) 27 ஓட்டங்களையும் சுக்லா 10 பந்துகளில் (2 சிக்ஸர்கள் அடங்கலாக) 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரவிச்சந்திரன் அஸ்வின் 4 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக்கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பொல்லிங்கர் 4 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஜகதி, முரளிதரன் மற்றும் ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



பதிலுக்கு 20 ஓவர்களில் 140 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர்கிங்ஸ் அணி ரெய்னா–விஜய் ஜோடியின் அதிரடியில் 13.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 143 ஓட்டங்களைக்குவித்து 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதில் சுரேஸ் ரெய்னா 39 பந்துகளில் (11 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 78 ஓட்டங்களையும் முரளிவிஜய் 40 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 50 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக 13 ஓவர்களில் 137 ஓட்டங்களை குவித்தனர்.

இவ்வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய 12ஆவது போட்டியில் 6ஆவது வெற்றியைப்பெற்று 12 புள்ளிகளைப்பதிவு செய்து (ஓட்டவிகித சராசரியில்) இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது.

இதன் மூலம் சென்னை சுப்பர்கிங்ஸ் அணி அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டது.

இதேவேளை கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 12ஆவது போட்டியில் 7ஆவது தோல்வியைச்சந்தித்தது.

இதன் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் அரையிறுதி வாய்ப்பு எட்டாக் கனியாகவுள்ளது.

# மும்பை அணிக்கு ஒன்பதாவது வெற்றி; டில்லி டேர் டேவில்ஸ் அணி ஏமாற்றம்

(மும்பை)

பொல்லார்ட்டின் அதிரடி துடுப்பாட்டத்தின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்றுவரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் இருபது–20 கிரிக்கெட் தொடரில் லீக் சுற்றின் 47ஆவது போட்டி நேற்று மும்பையில் நடைபெற்றது.

இப் போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் காம்பீர் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 183 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பொல்லார்ட் ஆட்டமிழக்காமல் 13 பந்துகளில் (2 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் திவாரி 28 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 26 பந்துகளில் (3 பவுண்டரி அடங்கலாக) 30 ஓட்டங்களையும் ராயுடு 21 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 24 ஓட்டங்களையும் டுமினி ஆட்டமிழக்காமல் 14 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சங்வான் 2 விக்கெட்டுக்களையும் நெகரா,மைக்டொனால்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 184 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 144 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் மைக்டொனால்ட் ஆட்டமிழக்காமல் 31 பந்துகளில் (ஒரு சிக்ஸர் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் டேவிட் வோர்னர் 15 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 31 ஓட்டங்களையும்.

வீரேந்திர சேவாக் 18 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 20 ஓட்டங்களையும் அணித்தலைவர் காம்பீர் 9 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டில்கார பெர்னாண்டோ, மோர்டாஷா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த பொல்லார்ட் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 12ஆவது போட்டியில் 9ஆவது வெற்றியைப் பெற்று 18 புள்ளிகளை பதிவு செய்தது.

இதன் மூலம் இத் தொடரில் அதிக (9) போட்டிகளில் வெற்றிபெற்று கூடிய (18) புள்ளிகளை எடுத்த அணி என்ற பெருமையை மும்மை அணி பெற்றது.

ஏனைய அணிகள் இனிவரும் போட்டிகளில் வெற்றிபெற்றால் 16 புள்ளிகளுக்கு மேல் பெறமுடியாது.

இதேவேளை டில்லி டேர் டேவில்ஸ் தான் விளையாடிய 12ஆவது போட்டியில் 6ஆவது தோல்வியைச் சந்தித்தது.

இதன் மூலம் அடுத்த இரு போட்டிகளில் வெற்றிபெற்றால் மட்டுமே டில்லி டேர் டேவில்ஸ் அணிக்கு அரையிறுதி வாய்ப்பு.

## அனைவரும் வாழ்வில் முன்னேற்றம் அடைய புதுவருடத்தில் இறைவனை பிரார்த்திப்போம்

## யாழ். அரச அதிபர் வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் நீண்ட நிலைத்த சமாதான வாழ்வும் வாழ்க்கையில் முன்னேற்றமும் அடைய இப்புதுவருடப் பிறப்பில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எமது மக்கள் அனைவரும் சொந்த இடங்களில் சொந்தக்காலில் உழைத்து வாழ்வதற்கான நிலையையும் எல்லாம்வல்ல இறைவன் வழங்க வேண்டும்.

அரச ஊழியர்கள் மக்களுக்கு சிறந்த முறையில் பணியாற்ற முன்வரவேண்டும். மக்களுக்கு சிறந்த சேவையாற்றுவதன் மூலம் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்றைய விகிர்தி புதுவருடம் அனைவருக்கும் நல்ல ஆண்டாகத் திகழவேண்டும் என இறைவனைப்பிரார்த்திப்பதுடன் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (ச–5)

## மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்த ஆண்டாக புத்தாண்டு அமையட்டும்!

## யாழ். கட்டளைத்தளபதி வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

இன மத பேதம் இன்றி இன்று கொண்டாடப்படும் இந்த கலாசார வைபவத்தினை போன்று ஒருதாய் மக்களாக இணைந்து செயற்படுவோம். அத்துடன் உதித்த இந்த தமிழ் சிங்கள புத்தாண்டு உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் மகிழ்ச்சியும் சௌபாக்கியமும் நிறைந்த ஆண்டாக அமைய வேண்டும் என்று பிரார்த் திக்கின்றேன் என யாழ்.பாதுகாப்புபடைகளின் கட்டளைத்தளபதி மேஜர்ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க வெளியிட்டுள்ள புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புத்தாண்டை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் வாழும் உங்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக கிடைத்த இந்த சந்தர்ப்பமானது நான் அடைந்த பாக்கியமாகவும் எனது பொறுப்பாகவும் கருதுகின்றேன்.

2010ஆம் ஆண்டு மலர்ந்த இந்த தமிழ், சிங்கள புத்தாண்டு நம் அனைவருக்கும் சமாதானமும் சௌபாக்கியமும் நிறைந்த ஆண்டாக வேண்டும் என்று முதலில் பிரார்த்திக்கின்றேன்.

தமிழ் சிங்கள இனங்களான நம் அனைவரதும் பிரதான கலாசார நிகழ்வான இந்த புத்தாண்டை கொண்டாடும் இந்த சந்தர்ப்பத்தின் ஒரே இனமாக எழுச்சிபெறுவதற்கு திட சங்கர்ப்பம் கொள்வோம்.

பலவருடங்களாக நடைபெற்ற யுத்தத்துக்குள் உள்வாங்கப்பட்டு தற்போது சமாதானமான சுதந்திரமான வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கும் யாழ்.குடாநாட்டில் வாழும் உங்களுக்கு கடந்த வருடங்களை விட இவ்வருடம் சமாதானத்துடன் புத்தாண்டை கொண்டாடகிடைத்துள்ளது.

இச்சூழலை ஏற்படுத்துவதற்கு பாதுகாப்பு படையினராகிய நாம் பெரும் தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் செய்து வந்ததுடன் உங்களுக்கான அத்தியாவசிய சேவைகளையும் முன்னரைவிட சிறந்த முறையில் மேற்கொண்டுள்ளோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகம் ஊட்ட விரும்புகின்றேன்.

யாழ். குடாநாட்டில் வாழும் உங்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவதில் பாதுகாப்பு தரப்பினருடன் கைகோர்த்து பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செய்து வரும் அரச சேவை அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள், தனியார் துறையினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றுள்ளது. (ச–5)

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



## கடும்...

கூடுதல் சாத்தியம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழர் பிரச்சினைக்கு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் காத்திரமான தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்காலம் குறித்த பிரகாசமான சிந்தனைகளுடன் தமிழ் மக்கள் வாழக் கூடிய ஓர் பின்னணி உருவாக்கப்பட வேண்டியது அவசியம்.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்குதல் போன்ற நடவடிக்கை எடுத்தல் போன்றவை குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதன் மூலம் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள முடியும். இலங்கைச் சட்டத்திற்கு அமைவான முறையில் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான விசாரணைகள் நடைபெறும் என அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் இந்திய ஊடகம் ஒன்றுக்கு அளித்த விசேட செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-1)

# பிரதமர் பதவிக்கு மீண்டும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மீண்டும் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் புதிய வெளிவிவகார அமைச்சராகத் தனது நம்பிக்கைக்குரிய சகோதரர் பசில் ராஜபக்ஷவை நியமிக்க மகிந்த ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ரட்ணசிறி விக்கிரம நாயக்க எதிர்வரும் 23 ஆம் திகதி பிரதமராக பதவிப்பிரமாணம் செய்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் பிரதமர் பதவிக்காக இரண்டு பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை பிரதமர் பதவியில் அமர்த்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன மற்றும் டி.எம்.ஜயரட்ண ஆகியோரது பெயர்கள் முன்னர் பிரதமர் பதவிக்காகப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

எனினும் திறமைகளின் காரணமாக இந்தப் பதவி மீண்டும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதே வேளை தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்குத் தேசியப் பட்டியலில் இடமளிப்பதில்லை என்ற இறுக்கமான கொள்கையை கட்சி மட்டத்தில் ஏற்கனவே மகிந்த அறிவித்த காரணத்தினால் தேர்தலில் தோல்வியடைந்த ரோகித போகொல்லாகமவின் அரசியல் வாழ்வு அடுத்து ஆறு வருடங்களுக்கு அஸ்தமனதாகி விட்டது.(ச-5)

## அடுத்த வரவு-செலவுத்...

பகுதியில் அரசியல் அமைப்பு திருத்தம் பிரதான தொனிப் பொருளாகப் பேசப்பட்டாலும் அரசாங்கம் சமூகத்தில் காணப்படும் உண்மையான பிரச்சினைகளை மூடிமறைக்கும்.

இதனால் உண்மையான பிரச்சினைகளை அரசியல் அமைப்புத் திருத்தம் என்ற பெயரில் மூடி மறைக்க இடமளிக்கக் கூடாது.

மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல மக்கள் அணிதிரள வேண்டும்.

புதிய அரசாங்கம் தாக்கல் செய்யவுள்ள புதிய வரவு-செலவுத் திட்டம் தற்போது காணப்படும் நாட்டு மக்களின் நிலைமையினை மாற்றியமைக்கப் போவதில்லை.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்புரிமைகள், உரிமைகள் பலரத்துச் செய்யப்படும் என்பது உறுதி என்றார். (ச-5)

## பத்ம...

இந்திய மத்திய புலனாய்வு அமைப்புத் தெரிவித்தது.

தற்போது இந்தியா மீண்டும் பத்மநாதனை விசாரிக்க கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் அவரது வங்கிக் கணக்கு களையும் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் இறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியையும் வழங்குமாறு இந்திய மத்திய புலனாய்வு அமைப்பு கோரியுள்ளது. (ச-5)

## தமிழ்...

ச்சியுடனும் ஜனநாயகப் பண்புகளை மதித்தும் மனித உரிமைகளைப் பேணியும் கொண்டாடப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ச-5)

## இலங்கை...

ஆரம்பத்தில் தனது அமெரிக்கக் குடியுரிமையைப் புதுப்பிக்கச் சென்ற பாதுகாப்புச் செயலாளரிடம் அமெரிக்க உள்துறைத் திணைக்களம் விசாரணை நடத்திய போதிலும் அவர் அதனைப் பகிரங்கப் படுத்தவில்லை.

பின்னர் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா அமெரிக்கா சென்றிருந்தபோது அமெரிக்க உள்துறைத் திணைக்களம் விசாரணைகளை நடத்த அதன் அதிகாரிகள் அழைப்பு விடுத்தபோது அவர் விசாரணைகளுக்கு முகம் கொடுக்காமல் இலங்கை திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் இலங்கையின் இராணுவத் தலைவர் ஒருவர் அமெரிக்காவுக்கு இம் முறையே விஜயம் செய்கின்றார். இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியவின் மூன்று சகோதரர்கள் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.

இவர்கள் ஹியுஸ்டன், பில்டெல்பியா மற்றும் சிக்காகோ நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர். சிக்காகோ நகரில் வசிக்கும் சகோதரரின் பிள்ளை ஒருவரின் திருமணம் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காகவே இராணுவத் தளபதி அமெரிக்கா செல்லவுள்ளார். (எ-5)


## காணி விற்பனைக்கு

யாழ். நகருக்கு சுமார் 4Km தூரத்தில் நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்பு மிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய சுமார் 4 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விரும்பினால் இரண்டாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

உடன் தொடர்புகளுக்கு:-
077 2469015, 072 5682849, 078 6711952

(125)




NALIN இன் காட்சியறையில்

தமிழ் புத்தாண்டு வெகுமதி மூன்று வருட உத்தரவாதத்துடன்

DUAL SERIES
- Intel 2.7 Dual Core
- Asus G31 Mother Board
- 320GB Samsung HDD
- 1GB Kingston(800) memory
- 22X Samsung DVD Writer
- Power Logic Casing
- Multi Language Key Board
- Optical Mouse
- MM Speaker
- 19' LG/19 AOC LCD Monitor
- UPS 650w

UPGRADE
500GB Hard Disk
Samsung
இவை அனைத்தும் வெறும்
51, 800/=

மேலும் அனைத்து கணனி உதிரிப்பாகங்களும்
புத்தாண்டை முன்னிட்டு விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது

NALIN Information Technologies Pvt Ltd

(048)

195/4 PARAMESWARA JUNCTION TP:0212221166, 0777667974

## தொழிற் பயிற்சிகள்

- றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
- Mobile Phone Repairing
- ஏயர் கொண்டிசனிங்





பயிற்சிகள் ஆரம்பம் : 18.04.2010

குறிப்பு: சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்களிற்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

இல.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 071 8561654, 077 9254078

(சி-047)

யாழ். நகரின் No.1 கல்வி நிறுவனம்
22ஆவது வருட கல்விச் சேவையில்...

O/L DAY CLASS

ஆரம்பம்: 16.04.2010
வெள்ளி 8.30 மணி

(சி-052)

- எமது Super Grade ஆசிரியர் குழு
- புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## பாரதியின் புத்தாண்டு வாழ்த்துக்கள்

வலம்புரி மிக்சர், மணலாறு கச்சான் அல்வா, சம்பியன் எள்ளுருண்டை மற்றும் இனிப்பு வகைகள் தயாரிப்பாளர்களான கொக்குவில் பாரதி இன்டஸ்றீஸ் நிறுவனத்தார் ஆகிய நாம் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த அன்பையும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

பாரதி இன்டஸ்றீஸ்
இல.19, சம்பியன் லேன்,
கொக்குவில்.

(11 66)

"தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு;
கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்."
வாருங்கள்! கேளுங்கள்!! அனுபவியுங்கள்!!!

## வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷ ஆராதனைகளும்

2010 ஏப்ரல் 14 ஆம் திகதி
புதன் மாலை முதல் 18 ஆம் திகதி ஞாயிறு வரை
தினமும் மாலை 5.30 மணிக்கு

இலங்கை பெந்தெகொஸ்தே சபைச்சாலை,
111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

பிசாசின் பிடி, பாவம், மதுபானம், புகைத்தல், பில்லிசூனியம், கொலை இன்னும் தீய பழக்கவழக்கங்களிலிருந்து இயேசு விடுவிக்கிறார். சமாதானம், சந்தோஷம், பாவமன்னிப்பு தருகிறார்.

இலவச உட்பிரவேசம்!
காணிக்கை சேர்க்கப்படமாட்டாது!!
வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்!!!

## முன்பள்ளி பாடசாலை

(Maria Montessori Method)

| Class | Age | Time |
| --- | --- | --- |
| Lower Nursery | 2½ - 3 | 8. 30 a.m 11.00 a.m |
| Upper Nursery | 3 - 4 | 8. 30 a.m 11.30 a.m |
| Pre - Grade | 4 - 5 | 8. 30 a.m 12.00 a.m |



100% ஆங்கிலத்தில் பயிற்சி

பயிற்றுவிக்கும் முறைகள்
- ஆங்கிலத்தில் பேச்சு பயிற்சிகள்
- (Audio & Video Visual) மூலமாக பாட்டு, கதைகள்
- கணனி தொடர்பான அறிவுசார் விளையாட்டுக்கள்
- பாரம்பரிய கதைகள், வரைதல், கைவேலைகள்
- இசைக்கருவி பயிற்சிகள் (Guitar, Keyboard)

100% எதிர்காலக் கல்வியில் வெற்றி

இன்றைய நவீன யுகத்திலே சிறு பிராயத்திலிருந்தே மாணவர்களின் ஆங்கில / தமிழ் அறிவை புதிய தொழில் நுட்பங்களுக்கேற்றவாறு விருத்தி செய்வதனூடாக எதிர்காலத்தில் அவர்கள் வளமான ஒரு வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கமைவாக அவர்களை தயார்ப்படுத்தும் செயல் திட்டமே எமது முன்பள்ளிப் பாடசாலை

BRITISH College of Higher Studies
No.15,2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.
Tel: 021 2224550 HotLines: 0773501499 / 0777222422 Email: info@bchs.lk

(C-036)

## Pre School வகுப்புகள்
(ஆங்கில மொழிமூலம்)

பாடசாலையில் ஆங்கில மொழிமூலம் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைய ஆரம்பிக்கப்படுகிறது

வகுப்புகள் : 1,2,3,4 & 5

SUBJECTS Maths, Enviorment Studies, English, Computer, Elocution.

எமது புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கற்கைநெறிகளில் இணையும் மாணவர்களின் ஆங்கிலப் புலமை விருத்திசெய்யப்பட்டு அவர்களின் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளுக்கு எம்மால் உத்தரவாதம் அளிக்கப்படும்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15, 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
Tel :021-2224550, 0777222422, 0714299935, 0773501499
Email :info@bchs.lk

(C-035)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.